256

வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

MADRAS
2.53

மார்ச் 1953

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.

அணா 6

THE VAKIL * TAMIL LAW MAGAZINE

தமிழில்
சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

"வக்கீல்" 1952-ம் வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணை யுடன் பைண்டு செய்யப் பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

"வக்கீல்" 1951-ம் வருடம் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

விற்பனை வரி (விதிகள் உள்பட விளக்கம்) ரூ. 2 0 0

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம் [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

தஞ்சை சாகுபடிதார் பண்ணை யாள் பாதுகாப்புச் சட்டம் [புதிய சட்டம், விதிகள், நமூனக்கள், குத்தகைப் பத்திர நமூனு, வார சாகு படிப் பத்திர நமூனு உள்பட விளக்கம்] 0 6 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

வி. பி. பி. கிடையாது.
அணா 8 சேர்த்து அனுப்பினால் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழே கண்ட விலாசத்திற்கு தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

மானேஜர்,
"வக்கீல்" காரியாலயம்,
தபால் பெட்டி 26 :: கும்பகோணம் (S. I.)

"வக்கீல்"

பொது மக்களுக்கான
உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
" V. தியாகராஜன், B.A., B.L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன், B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L., [ஆசிரியர்]

"வக்கீல்" சந்தா விபரம்

தனிப் பிரதி அணா 6. வருட சந்தா ரூ. 5 விசேஷ வருட சந்தா ரூ. 9. ஷை வெளிநாடு ரூ. 10. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:— வருஷ சந்தாதாரர்களுக்கு 12 மாத இதழ்களும், அந்த வருடத்திய பொருள் அட்டவணையும் அனுப்பப் படும். (பொருள் அட்டவணை தேவை யில்லாதவர்கள் அணா 8 கழித்துக் கொண்டு பாக்கி ரூ. 4-8-0 அனுப் பினால் போதும்.) விசேஷ வருட சந்தாதாரர்களுக்கு மேற்கண்டவை அனுப்புவதுடன் அவ்வருடத்திற்குள் "வக்கீல்" சப்ளிமெண்டுகளாக பிரசுர மாகும் 3 சட்ட புத்தகங்களும் அனுப் பப்படும். ஆயுள் சந்தாதாரர்கள் இனி சந்தா கட்டவேண்டியதில்லை. அவர் களுக்கு மேற்கண்டவை எல்லாம் அனுப்பப்பட்டுவரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

**மானேஜர் "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26, கும்பகோணம்
(தென் இந்தியா)**

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

"வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்)	ரூ.	100
உள் அட்டை முழுப் பக்கம்	ரூ.	80
உள் பக்கம் முழுப் பக்கம்	ரூ.	60
ஷை ... அரைப் பக்கம்	ரூ.	35
ஷை ... கால் பக்கம்	ரூ.	20
ஒரு காலம் - அங்குலம்	ரூ.	5

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10 % குறைக்கப் படும்.)

வக்கீல்

பொருள் அடக்கம்

மலர் 5 மார்ச் 1953 இதழ் 3

மறுபடியும் யுத்தமா? .. 3
ஆந்திரர்களுக்கு என்ன வேண்டும்? .. 3
புதிய சட்டங்கள் .. 5
கண்ட்ரோல் .. 7
உலகில் இந்து விவாகம் விவாகரத்து மசோதா .. 9
வழக்கும் தீர்ப்பும்
*மனம் போன போக்கில் முனிசி பாலிடியார் வீட்டுவரி விதித்தால்— அதை ரத்துச் செய்ய கோர்ட்டில் தாவா செய்யலாமா?— .. 15
*சங்கரனுடைய முதல் மனைவி இறந்து விட்டாள். அவளுடைய தகப்பன் சொத்தை அடைய அவ ளுக்கும் தமக்குமாக ஒரு மகனை அவர் சுவீகாரம் செய்து கொண் டார். ஆனால் அப்பொழுது சங்கர னுக்கு இரண்டாவது மனைவி இருந்தாள். சுவீகார மகனுக்குத் தாய் யார்?— .. 17
*விவசாயிகள் கடன் பற்றிய ஒரு முக்கிய தீர்ப்பு. அசல் 'வட்டிக்கு' என்று பிராமிசரி நோட்டில் செல வைத்த பிறகு கணக்குத் தீர்த்துப் புதிய நோட்டு எழுதிக் கொடுத் தால்—சட்டம் என்ன? .. 17
*இந்திய அரசியல் அமைப்பில்எந்த தொழிலை நடத்தவும் மக்களுக்கு ஒரு ஜீவாதார உரிமை உண்டு. ஆனால் ஒருவர் நடத்தும் தொழிலை நிறுத்த அவருக்கு உரிமை கிடையாதா? .. 18
*டிக்ரி பெற்றவர் தவறுதலாக தம் முடைய சொத்தையே கோர்ட்டு ஏலத்துக்குக் கொண்டு வந்து விட் டார். வேறுஒருவரும்அச்சொத்தை ஏலத்தில் வாங்கி விட்டார் .. 20
கேள்வியும்—பதிலும் .. 21
சென்னை கிராமப் பஞ்சாயத்துச் சட்டம் .. 28
உங்கள் தீர்ப்பு என்ன? .. 31

187720

கல்யாண காலங்களுக்கு

பட்டு & நூல் ஜவுளிகள்

கிடைக்குமிடம்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ் :

PHONE 84188

மைலாப்பூர் ராதா ஸில்க் எம்போரியம்

மதராஸ்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது

~ அன்னகிளி ~

சோப்

—தயாரிப்பவர்—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38 :: தஞ்சாவூர்

சுல்தானியா

படை மருந்து

இது 37 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனு முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தேமல் வியாதிகளை உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணு 12.

சிறிய ,, ,, ,, அணு 6.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை S. Ry.

வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 5 மார்ச்சு 1953 இதழ் 3

மறுபடியும் யுத்தமா?

யுத்த வீரர்களின் கையில் துப்பாக்கியைக் கொடுக்கலாமே ஒழிய, செங்கோலை அவர்களிடம் ஒப்புவிப்பதில் ஒரு பேராபத்து இருக்கத்தான் இருக்கிறது. அமெரிக்கத் தளகர்த்தராகிய ஐஸன்ஹோவரை அமெரிக்க மக்கள் ஐந்து ஆண்டுகளுக்குத் தங்களுடைய புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஐஸன்ஹோவரும் சென்ற மாதம் தான் பதவி ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர் பதவி ஏற்றுக்கொண்ட சில தினங்களுக்குள் உலகமே நடுங்கும்படியான ஒரு காரியத்தை அவர் செய்து விட்டார். அவருடைய செய்கையானது மூன்றாவது உலக மகா யுத்தத்தை மூட்டும் ஒரு தீக்குச்சியாகும்.

உலகத்தில் மிகப் பெரிய தேசமாகிய சீனா தேசத்தில் இப்போது கம்யூனிஸ்ட் எனப்படும் பொது உடைமைக்கட்சிதான் அரசாங்கம் நடத்தி வருகிறது. முன்பு அங்கே அரசாங்கம் நடத்திய சியாங்கேஷேக் என்பவர் பார்மோஸா என்ற ஒரு சிறிய தீவில் அமெரிக்கப் பந்தோபஸ்தில் ஒளிந்துகொண்டிருக்கிறார். இவரைத்தான் அமெரிக்கா சீனா தேசத்தின் சட்டபூர்வமான அரசாங்கமாகப் பாவித்து தனக்கு வேண்டிய சந்தர்ப்பங்களை அவ்வப்பொழுது சிருஷ்டி செய்து கொள்ளுகிறது. ஐஸன்ஹோவருக்கு இப்போது உடனேயே யுத்தம் ஒன்றுவேண்டும். அதை எப்படி ஆரம்பிப்பது? சியாங்கேஷேக் சீனாவை மறுபடியும் கைப்பற்றப் போகிறாராம்.

இதுவரை அதைத்தடுத்த அமெரிக்கக் கப்பற்படையை புதிய ஜனாதிபதி வாபஸ் வாங்கிக்கொண்டார். சீனாவை விட்டுக் கம்யூனிஸ்டுகளை, சியாங்கேஷேக் விரட்டிவிட சீனாவுக்கு அவர் போக வேண்டும். கம்யூனிஸ்டுகளுடன் அவருக்குச் சண்டை ஏற்படும். கம்யூனிஸ்ட் சீன அரசாங்கத்திற்கு ருஷ்யா உதவி செய்யும். சியாங்கேஷேக்குக்கு அமெரிக்கர் உதவிசெய்வார்கள். சண்டையானது மகாயுத்தமாகும். அணுகுண்டுகள் வீசப்படும். யார்மீது, எப்பொழுது?

அமெரிக்க ஜனாதிபதியின் இச்செய்கையைக் கண்டு இந்தியா மட்டுமல்ல, மற்ற உலக வல்லரசுகள் யாவும் ஸ்தம்பித்துப் போயின. இங்கிலாந்தைக்கூட ஐஸன்

ஹேவர் கலந்து கொண்டதாகத் தெரிய வில்லை. கம்யூனிஸம் அல்லது பொது உடைமை என்பது ஒரு ராஜ்யமல்ல, ஒரு சேனை அல்ல, ஒரு பட்டாளமல்ல என்பதை அமெரிக்க யுத்த வீரர் கவனிக்க வில்லை. அவ்விதம் இருந்தாலல்லவா அவற்றைச் சண்டையில் ஜயிக்க அமெரிக்கர்களால் முடியும். கம்யூனிஸம் என்பது ஒரு கொள்கை; ஒரு தத்துவம்; ஒரு மனோ நிலைமை. அமெரிக்கர்கள் ருஷ்யாவையே பிடித்துவிட்டாலும், ஸ்டாலினைக் கொன்றுவிட்டாலும், அவர்கள் கம்யூனிஸத்தை ஒழித்துவிட்டதாகவோ புதைத்து விட்டதாகவோ ஏற்படாது. தத்துவங்களை ஆராய்ச்சி செய்வதிலேயே பல்லாயிரம் ஆண்டுகளைக் கழித்து வரும் ஆசிய நாடுகளிடையே, மிருக பலத்தை மட்டில் ஆதாரமாகக் கொண்டு அமெரிக்கர்கள் எதையும் சாதித்துவிடமுடியாது.

*

ஆந்திரர்களுக்கு என்ன வேண்டும்?

இவ்வருடத்திற்குள் சென்னை ராஜ்யத்தை விட்டு ஆந்திரதேசம் பிரிந்து விடும். தங்களுக்குத் தனி ராஜ்யம் கேட்ட ஆந்திரர்கள் இன்னும் சில மாதங்களில் திருப்தி அடைவார்கள். ஆந்திர ராஜ்ய அமைப்பு விஷயமாக ஆலோசனை சொல்ல மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட நீதிபதி வாஞ்சு அவர்கள் செய்த சுற்றுப் பிரயாணத்தில் தான் ஆந்திரத் தலைவர்களின் பரம ரகசியம் ஒன்று வெளிப்பட்டது. நமது சென்னையைத் தங்களுக்கும் தலை நகராக்க வேண்டுமென்று கேட்ட சென்னை ஆந்திரர்கள் மீது நமக்குக் கோபம் வந்தது. ஆனால் நீதிபதி வாஞ்சு ஆந்திர நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது விஜயவாடா வாசிகள் விஜயவாடாவையும்; மசூலிப்பட்டிண வாசிகள் மசூலிப்பட்டினத்தையும்; நெல்லூர் வாசிகள் நெல்லூரையும்; குண்டூர்வாசிகள் குண்டூரையும்; ஏலூருவாசிகள் ஏலூரையும்; விசாகப் பட்டிணம் வாசிகள் விசாகப் பட்டிணத்தையும், ஆந்திர ராஜ்யத்தின் தலை நகரமாக்கவேண்டுமென்று வற்புறுத்தினர். நியாயமான கோரிக்கைகள். நீதிபதி வாஞ்சுவானவர் தமிழ் நாட்டிலும் சுற்றுப் பிரயாணம் செய்திருந்தால் மதுரையில் வசிக்கும் ஆந்திரர்கள் மதுரையையே ஆந்திரதேசத்துக்குத் தலை நகராகச் செய்ய வேண்டுமென்றும் திருச்சி, சேலம், கோயமுத்தூர் திருநெல்வேலி இவ்விடங்களில் தாற்காலிகமாக இருக்கும் ஆந்திரர்களும் அவரவர் வசிக்கும் ஊரையே ஆந்திரத் தலை நகராகச் செய்யவேண்டுமென்றும் கேட்டிருப்பது திண்ணம்! எதற்கும் துணிந்த ஆந்திரர்கள்! ஆனல் ஆந்திர ராஜ்யத்திற்காகத் தமது உயிரை விடாமலும் தமது தேகம் அலுங்காமலும் 'தபசு' செய்யும் சுவாமி சீதாராம் என்பவர் சமீபத்தில் டில்லிக்குப் போய் அங்கு வேறு ஒரு ஆலோசனை சொன்னர். அதாவது, ஐந்து அல்லது பத்து வருடங்களுக்கு ஆந்திர ராஜ்யத்திற்கும் சென்னை ராஜ்யத்திற்கும் பொதுவாகவே கவர்னர், ஹைகோர்ட், தலைநகரம் இவை எல்லாம் இருக்கலாமென்றும் ஆலோசனை சொல்லியிருக்கிறர். இப்போது இருப்பதும் அதுதானே என்று அவர் எண்ணவில்லை போலும்! அவர் கேட்பது தனி மந்திரி சபையா. இப்பொழுதே சென்னை மந்திரி சபையில் பாதி ஆந்திரர்கள் இல்லையா? பின் ஆந்திரர்களுக்கு என்ன வேண்டும்? ஆந்திரர்களுக்கு இப்போது அவசியமாக வேண்டியது மூளை ஒன்று தான்!

★

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 5-ம் தேதிக்குள் உங்களிடம் கிடைக்காவிட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும்.

ஏஜண்டுகள் மூலம் "வக்கீல்" வாங்கிவரும் இந்தியாவிலிருக்கும் நேயர்களுக்கும் 4-ம் தேதிக்குள் "வக்கீல்" கிடைக்காவிட்டால் ஆபீசுக்கு எழுதி தருவித்துக்கொள்ளலாம்.

வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தத்தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்பலாம்.

புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

1952 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

73. இந்திய 'பவர் ஆல்கஹால்' திருத்தச் சட்டம். Indian Power Alchohol—Amendment Act *1952*. *(26-12-1952.)* யந்திரசக்தி உற்பத்தி செய்ய உபயோகப்படும் 'ஸ்பிரிட்' அல்லது மதுசாரத்தைப்பற்றிய *1948*-ம் வருடத்திய *22*-வது சட்டமானது B ராஜ்யங்களுக்கும், அதாவது ஏற்கனவே சுதேச சமஸ்தானங்களாக இருந்து இப்போது இந்திய யூனியனைச் சேர்ந்திருக்கும் ராஜ்யங்களுக்கும் விஸ்தரிக்கப் பட்டிருக்கிறது. மேலும், இது சம்பந்தமான கைத்தொழிலானது பொதுமக்களுக்கு அத்தியாவசியமானதென்றும், அத்தொழிலை மத்திய சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறதென்றும் பிரகடனம் செய்யும் ஷரத்து ஒன்றும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

74. தவணை ஒப்பந்த ஒழுங்குச் சட்டம். The Forward Contracts Regulation Act *1952*. *(26-12-1952.)* வியாபாரத்தையே சூதாட்டத்திற்காக உபயோகிக்கும் ஒரு பழக்கத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்கு செய்வதற்கான ஒரு சட்டம். கையில் சரக்கே இல்லாத ஒருவர் அதை ஒரு குறிப்பிட்ட கெடுவுக்குள் விற்பதாகவும், கையில் பணமில்லாத ஒருவர் அதை ஒரு குறிப்பிட்ட விலைக்கு அன்று வாங்கிக் கொள்ளுவதாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டு சரக்கு கொடுக்கவேண்டிய தினத்தில் அச்சரக்கு மார்க்கெட்டில் என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ, அதைப் பொறுத்து ஒருவருக்கொருவர் லாப நஷ்டத் தொகைகளை மட்டில் கொடுத்து வாங்கிக் கணக்கை நேர் செய்து கொள்ளுவது உண்மையான வியாபாரமல்ல—அது ஒரு வகை சூதாட்டம். (பம்பாய் பட்டணத்தில்தான் இது அதிகம்.) அதைத் தடுக்கவும், உண்மையான சரக்கு வாங்கிவிற்பதை ஒழுங்கு படுத்துவதற்காகவும் இச்சட்டம் ஏற்பட்டிருக்கிறது. இச்சட்டப்படி உடனேயோ அல்லது 11 நாட்களுக்குள்ளோ சரக்கும் 'டிலிவரி' கொடுத்து, விலையும் கொடுக்கப்படும் ஒப்பந்தங்கள் மட்டில் எவரும் செய்துகொள்ளலாம். மற்ற தவணை ஒப்பந்தங்கள் (Forward Contracts) செய்துகொள்வதென்றால் இச்சட்டப்படி அங்கீகாரம் செய்யப்பட்ட சங்கங்களின் அங்கத்தினர்களிடையேயோ, அவர்கள் மூலமாகவோ செய்து கொண்டால் தான் செல்லும். இவ்வித ஒப்பந்தகளும் சில செல்லும்படி விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் உடனேயே அமுலுக்கு வந்துவிடவில்லை. குறிப்பிட்ட இடங்களுக்கு மட்டில், குறிப்பிட்ட சரக்குகளைப் பொறுத்த வரையில் இச்சட்டத்தின் எல்லா ஷரத்துக்களையுமோ அல்லது சில ஷரத்துக்களை மட்டுமோ குறிப்பிடப்படும் தேதி முதல் அமுலுக்குக் கொண்டு வர மத்திய சர்க்காருக்கு இச்சட்டத்தால் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது.

75. மேற்கு வங்காள (திருபுரா) குடிபெயர்ந்தோர் சட்டத் திருத்தம். West

Bengal Evacuee Property (Tripura Amendment) Act *1952. (26-12-1952)*

76. பாகிஸ்தானிலிருந்து உட்புகுவோர் கட்டுப்பாடு சட்டரத்து. The Influx from Pakistan Control Repealing Act *1952. (26-12-1952)* பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்குள் புகுபவர்களைக் கட்டுப்படுத்த ஏற்பட்ட *1949*-ம் வருடச் சட்டமும் *1952*-ம் வருடத்திய அவசரச் சட்டமும் ரத்து செய்யப் பட்டன.

77. பலாத்காரமாய் இழுத்து செல்லப் பட்ட மக்களை மீட்டி சீர் செய்வதற்கான சட்டத் திருத்தம். The Abducted Persons–Recovery and Restoration Amendment Act *1952. (26-12-1952)* இச்சட்டம் *28-2-1954* வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், சில ஷரத்துக்கள் அகில இந்தியாவுக்கும் பொருந்தும்படி விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

78. கைத்தொழில் நிதி கார்ப்பொரேஷன் சட்டத் திருத்தம். The Industrial Finance Corporation Amendment Act. *1952. (29-1-1952.)* கைத்தொழில் கார்ப்பொரேஷன் சட்டத்தை அனுசரித்து அக்கார்ப்பொரேஷனுனது அன்னிய நாடுகளிலிருந்து வாங்கும் கடன்களைத் திருப்பிக் கொடுக்க மத்திய சர்க்கார் உத்தரவாதம் செய்யலாமென்று அனுமதிக்கும் திருத்தமும் வேறுசில திருத்தங்களும் அச்சட்டத்தில் செய்யப்பட்டிருக்கின்றன.

79. இரும்பு எஃகு கம்பெனிகள் இணைப்புச் சட்டம். The Iron and Steal Companies Amalgamation Act *1952. (29--12--1952)* வங்காளத்திலிருக்கும் இரண்டு பெரிய இரும்பு எஃகு கம்பெனிகளை இணைத்து ஒன்ருகச் செய்யும் சட்டம் இச்சட்டப்படி 'ஸ்டீல் கார்ப்பொரேஷன் ஆப் பெங்கால்' என்ற கம்பெனி 'ஐயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி'யுடன் *1-1-1953* முதல் இணைக்கப்பட்டு விட்டது.

80. அரசாங்கப் பொதுச் செலவு அனுமதிச் சட்டம். The Appropriation No. 3. Act *1952. (29-12-1952)* *1952–53* நிதி வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் ரூ. *10,36,10,000* செலவு செய்ய இந்திய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

81. தேர்தல் தொகுதி அமைப்புக் கமிஷன் சட்டம். The Delimitation Commission Act *1952. (7-1-1953)* இச்சட்டப்படி ஒரு தேர்தல் தொகுதி கமிஷன் நியமிக்கப்படும். இக்கமிஷனில் ஹைகோர்ட் ஜட்ஜ் அந்தஸ்துள்ள இருவர்களும் பிரதான தேர்தல் கமிஷனரும் அங்கத்தினர்களாக இருப்பார்கள். கடைசியாக எடுக்கப்பட்ட ஜன கணிதையை ஆதாரமாக வைத்துக் கொண்டு, பார்லிமெண்ட் தொகுதிகளையும், ராஜ்ய சட்டசபைத் தொகுதிகளையும் இக்கமிஷன் நிர்ணயம் செய்யும்.

எங்கும் புகழ் பெற்ற அற்புத சஞ்சீவி

"ஜெயராம்" காயசுத்தி லேகியம் (Regd. No. 138512)

இரண்டே வேளையில் ஆச்சரியமான குணம் தெரியும்.
ஆயிரக்கணக்கான மக்களால் தினமும் உபயோகிக்கப்படுவது.

தலைவலி, மயக்கம், வாந்தி, கழுத்துப் பிடரிவலி, நெஞ்சுவலி. முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல், அஜீரணம், வயற்றுப்பிசம், வயற்றுவலி, இடுப்புவலி, கைகால் வலி, கிருமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், இருமல், நெரிக்கட்டிய சுரம், மூலநோய் முதலியவைகளை நீக்கி பசியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும்.

உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்

1 சேர் ரூ. 4–8–0 ½ சேர் ரூ. 2–4–0

வி. பி. பி. செலவு தனி

உங்கள் வியாதி எதுவாயினும் ஜெயராம் வைத்தியசாலைக்கு வாருங்கள்

தயாரிக்குமிடம் :— **ஜெயராம் வைத்தியசாலை,** 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, **கும்பகோணம்,**

கண்ட்ரோல்

உணவு தானிய லைசென்சு—கொள் முதல் உத்தரவு. லைசென்சு வழங்க அதிகாரிகள்.

அவரவர் அதிகார எல்லைக்குள் கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்கள் மேற்கண்ட உத்தரவுப்படி லைசென்சு வழங்க, அவர்களுக்கு சென்னை சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வியாபாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் மேற்படி உத்தரவின் ஷரத்து 3 (2)ல் கண்டபடி விதி விலக்கு அளிக்கும் அதிகாரம் அவரவர் அதிகார எல்லைக்குள் சென்னை சிவில் சப்ளைஸ் கமிஷனருக்கும், கமர்சியல் டாக்ஸ் ஆபீசர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. லைசென்சு நமூனா A-படி இருக்கும். லைசென்சு கிடைக்க மனு நமூனா B-படி இருக்க வேண்டும். லைசென்சு வாங்கியவர்கள் நமூனா C-ன்படி ஒவ்வொருமாதமும் 10-தேதிக்குள் ஸ்டாக் கணக்கு விபரம் அனுப்பவேண்டும்.

லைசென்சு கட்டணம்

உணவு தானிய லைசென்சு—கொள் முதல் உத்தரவுப்படி லைசென்சு வாங்கவும் லைசென்சைப் புதுப்பிக்கவும் வருடம் ஒன்றுக்கு ரூ. 24 கட்டணம் கட்ட வேண்டும். 'வருடம்' என்பது ஜனவரி முதல் தேதி முதல் டிசம்பர் 31-தேதி முடிய உள்ள ஒரு வருடத்தைக் குறிக்கும். 1953-வருடத்திற்கு மட்டில் ரூ. 18 கட்டினால் போதும். லைசென்சு கொடுக்கப்படும்போது ஒரு வருடத்தில் சில மாதங்கள் கடந்து விட்டாலும் மேற்கண்ட முழுக்கட்டணமும் கட்ட வேண்டும்.

(5-2-1953-சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் II-விசேஷ வெளியீடு-பக்கம் 1.)

சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவில் முக்கிய திருத்தங்கள்

1951-ம் வருடத்திய சென்னை ரைஸ்மில் லைசென்சு உத்தரவில் கீழே கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. அவையாவன:—(1) ஜில்லா கலெக்டர்கள் ரைஸ்மில் லைசென்சு வழங்குவது பற்றியும், மறுப்பது பற்றியும் அவ்வப்பொழுது சென்னை சர்க்கார் பொதுவாகவும் குறிப்பாகவும் (Special Orders) உத்தரவு பிறப்பிக்கலாமென்றும், அவைகளை அனுசரித்து கலெக்டர்கள் லைசென்சு வழங்கவேண்டுமென்று இருந்தது. இப்போது 'குறிப்பாகவும்' என்பது எடுக்கப்பட்டு விட்டது. அதாவது, இனி இது விஷயமாக யாவருக்கும் பொருந்தும்படியான பொது உத்தரவுகளைத் தான் சர்க்கார் கலெக்டர்களுக்கு அனுப்புவார்களே ஒழிய விசேஷ உத்தரவுகள் அனுப்ப முடியாது. (2) ரைஸ்மில் லைசென்சு உத்தரவின் 5-வது ஷரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. அதாவது, இனி புதிய யந்திரங்களைக் கொண்டோ வேறு வகையிலோ ரைஸ் மில்லின் அரைக்கும் சக்தியை (Hulling capacity) அதிகரித்துக கொள்ள யாதொரு அனுமதி அல்லது கலெக்டர் பர்மிட்டும் தேவையில்லை. (3) ரைஸ்மில் லைசென்சில் கண்ட நிபந்தனைகள் 2, 5 இவைகள் ரத்து செய்யப்பட்டன. நிபந்தனை 2-என்பது புதிதாக அதிகப்படி என்ஜின் ஷெல்லர், கிரைண்டிங் ஸ்டோன் அல்லது ஹல்லர் வைத்துக்கொள்ள ஜில்லா கலெக்டருடைய பர்மிட் வேண்டுமென்பது. நிபந்தனை 5-என்பது பர்மிட் இல்லாமல் நெல் அறைக்கக் கூடாதென்று தடைசெய்வது. இவ்விரண்டு நிபந்தனைகளும் ரத்து செய்யப்பட்டன. இனி ரைஸ்மில்கள் புதிதாக ஹல்லர் முதலிய சேர்த்துக் கொள்ளலாம். பர்மிட் இல்லாமலும் நெல் அரைக்கலாம்.

(4-2-1953-சென்னை சர்க்கார் கெஜட்—ரூல் சப்ளிமெண்ட்—பாகம் II-பக்கம் 11.)

"குல்ஷபா"

இரத்த சுத்தி லேகியம்

இரத்தத்தை சுத்தி செய்து, ஜீரணத்தை அதிகரித்து மலச்சிக்கலை நீக்கி, வயற்று வலி, ஈரல் குலை வலி, இருமல், பித்த வாய்வு இவைகளை குணப்படுத்தி நரம்புகளுக்கு பலம் கொடுத்து பாலிய நரையை மாற்றி இளமை அளிக்கும். தோல் சம்பந்தமான சகல வியாதிகளையும், நாள்பட்ட இருமல், நாள்பட்ட தலைவலி குணப்படுத்தும் சாப்பிடுவதற்கு அதிக ருசிகரமாய் இருக்கும் பத்தியம் கிடையாது.

10 நாள் 20 வேளை மருந்து டின் 1-க்கு விலை ரூ. 2-0-0

டாக்டர் ஜி. எஸ். அமீனதீன், எம். டி. எம். எஸ்.
ஹோமியோ கிளினிக்,
ரயில்வே ரோடு, கும்பகோணம்.

ஸ்ரீ மகாலெஷ்மி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்கு சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப் பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீபார்ட்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.

வெண்சங்கு நறுமண

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்

சட்ட சபையால் இயற்றப்பட்ட புதிய சட்டம்–விதிகள்–நமூனக்கள்–குத்தகைப் பத்திர நமூன–வார சாகுபடிப் பத்திர நமூன உள்பட எளிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

விலை அணு 6

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

தேவையான பிரதிகளுக்கு கீழே கண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும்.

மானேஜர்—"வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
தபால் பெட்டி 26, கும்பகோணம். (S. I.)

உயிர் ஓவியம், உயர் காவியம், உத்தம தியாகம்
உலகிற்கீந்த உயர்தர **சிவாஜி மார்க்**
புகையிலையை உபயோகித்து பரீட்சியுங்கள்.

உரிமையாளர்:—

S. M. அப்துல்காதர் ராவுத்தர்

மேல 4-ம் வீதி, புதுக்கோட்டை



உலையில்

இப்பகுதியில் இருப்பவை இன்னும் சட்டமாக வில்லை. சட்டங்கள் இயற்றப்படுமுன், அவ்விஷயத்தைப் பற்றி பூர்வாங்க நடவடிக்கைகள், அதாவது, கமிட்டியின் சிபார்சுகள், மசோதா, பொறுக்குக் கமிட்டி ரிப்போர்ட்டுகள், சர்க்கார் அறிக்கைகள் போன்ற விஷயங்களை நேயர்கள் இப்பகுதியிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

இந்து விவாகம், விவாகரத்து மசோதா

இந்துச் சட்டம் முழுமையும் தொகுத்து ஒரே சட்டமாகச் செய்ய, முன்பு மத்திய சர்க்காரால் ஒரு மசோதா கொண்டுவரப் பட்டிருந்தது. இதற்கு இந்து தொகுப்பு மசோதா (Hindu Code Bill) என்று பெயர். இம்மசோதாவை நிறைவேற்றுவதற்குள், முன்பு இருந்த தாற்காலிகப் பார்லிமெண்ட் சபை கலைந்துவிட்டது. அத்துடன் அம்மசோதாவும் போய் விட்டது. அதன் பிறகு பொதுத் தேர்தல் நடந்து இப்போது அமைக்கப்பட்டிருக்கும் டில்லி பார்லிமெண்ட் சபையால் அகில இந்தியாவுக்கும் சட்டமாக்கப்படுவதற்காக, மத்திய சர்க்கார் மறுபடியும் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். இது முன்போல் இந்துச் சட்டம் முழுமையும் தொகுக்கும் மசோதா அன்று. முன்பு இருந்த தொகுப்பு மசோதாவைப் பாகம் பாகமாகச் சட்டம் செய்வதே சுலபமென நினைத்து இப்போது இந்து விவாகம், விவாகரத்து சம்பந்தமான விஷயங்கள் மட்டில் அடங்கிய மசோதா ஒன்றைப் பார்லிமெண்டில் கொண்டு வந்திருக்கின்றனர். இம்மசோதாவைப் பற்றியும், முன்பு இந்து தொகுப்பு மசோதாவுக்கு இருந்தது போன்ற, பலத்த ஆட்சேபணைகள் ஒரு புறமும், பலத்த ஆதரவுகள் ஒரு புறமும் இருந்து வருகின்றன. இப்போது கூடியிருக்கும் பார்லிமெண்ட் சபையானது அநேகமாக இம்மசோதாவை அப்படியேயோ அல்லது திருத்தங்களுடனே சட்டமாகச் செய்துவிடக் கூடுமென்று தோன்றுவதால், இம்மசோதாவின் ஷரத்துக்கள் இங்கே விவரமாய் விளக்கப்பட்டிருக்கின்றன.

இச்சட்டத்திற்குட்பட்டவர்கள் யார்?

இம்மசோதாவானது சட்டமானால், அது இந்தியாவிலிருக்கும் இந்துக்களுக்கு மட்டுமல்ல, (இதில் வீரசைவர்கள், லிங்காயத்துக்கள், பிரம்மசமாஜத்தினர், பிரார்த்தனா, ஆரிய சமாஜத்தினர் இவர்களும் சேர்ந்தவர்களே) புத்த மதத்தினர், ஜைனர்கள், சீக்கியர்கள் இவர்களுக்கும் உண்டு. மேலும், இந்தியப் பிரஜைகளில், முஸ்லீம், கிறிஸ்தவர், பார்ஸி, யூதர் இந்நான்கு வகை தவிர மற்ற எவருக்கும் கூட இதே சட்டம் தான்; ஆனால் இவர்கள் இதுவரையில் தங்களுடைய பழக்க வழக்கங்களில் விவாகம் சம்பந்தமான இந்துச் சட்ட விதிகளைப் பின்பற்றுவதில்லை என்று ருசுப்பித்தால் மட்டில் அவர்களுக்கு இச்சட்டம் பொருந்தாது.

'இந்து' என்பவர் யார்?

மேலே கண்டபடி இச்சட்டம் யார் யாருக்குப் பொருந்துமோ அவர்களை எல்லாம் இந்துக்கள் என்று வைத்துக் கொண்டு, அதன்படி கீழே கண்டவர்களும் இந்துக்களாகவே பாவிக்கப்படுவார்கள். அவர்களாவார்:—(a) சட்ட பூர்வமான விவாகம் செய்து கொள்ளாத இரண்டு இந்து பெற்றோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள். (b) ஒரு குழந்தையின் பெற்றோர்களில் ஒருவர் மட்டில் இந்துவாக இருந்து அவர்கள் விவாகம் செய்து கொண்டோ செய்து கொள்ளாமலோ அவர்களுக்குப் பிறந்து இந்துப்

பெற்றோரின் இனம் அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக வளர்க்கப்படும் குழந்தைகள். (c) புதிதாக இந்து மதத்தைத் தழுவியவர்கள்; அல்லது முதலில் இந்துவாக இருந்து வேறு மதத்திற்குப் போய் மீண்டும் இந்து மதத்திற்கு மாற்றிக் கொண்டவர்கள்—இவர்கள் யாவரும் இச்சட்டப்படி இந்துக்கள் தான். அவர்களுக்கும் இச்சட்டம் உண்டு.

மற்ற விதிகளும் சட்டங்களும் ரத்தாகும்

இம்மசோதாவான துசட்டமானுல், இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணுக இருக்கும் வேறு சட்டங்களும், நூல்வாக்கியங்களும், விதிகளும், இந்து சட்டங்களின் பொருள் விளக்கங்களும், ஆசாரங்களும் பழக்க வழக்கங்களும் செல்லமாட்டா.

இந்து விவாகத்திற்கு வேண்டிய இன்றியமையாத நிபந்தனைகள்

அடியிற்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப் பட்டால் தான் இரண்டு இந்துக்கள் விவாகம் அல்லது திருமணம் செய்து கொள்ளலாம். அவையாவன:-(1) விவாகமாகும் காலத்தில் மணமக்கள் எவருக்கும் உயிரோடுள்ள வேறு மனேவியாவது கணவனுவது இருக்கக்கூடாது. (2) விவாகமாகும் காலத்தில் மணமக்களில் எவரும் மூடராகவோ (Idiot) பைத்தியமாகவோ (Lunatic) இருக்கக்கூடாது. (3) விவாகமாகும் காலத்தில் மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தி ஆகி இருக்கவேண்டும். (4) மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறை (உறமுறை—Prohibited degrees of Relationship) உள்ளவர்களாக இருக்கக்கூடாது. 'தடுக்கப்பட்ட உறவு முறை' என்பது கீழே விளக்கப்பட் டிருக்கிறது. ஆனல் விவாகம் செய்து கொள்ளுபவர்களுடைய ஆசாரம் அல்லது வழக்கப்படி இவ்வித உறவு முறை விவாகங்கள் அனுமதிக்கப் பட்டிருந்தால் இந்நிபந்தனை அவர்களுக்குக் கிடையாது. (5) மணமக்கள் ஒருவருக்கொருவர் 'ஸபிண்ட' உறவினர்களாகவும் இருத்தல் கூடாது. 'ஸபிண்ட' உறவினர்கள் என்ருல் என்ன என்றும் கீழே விளக்கப்பட்டிருக்கிறது. கவனிக்கவும். இந்த நிபந்தனேயும் வேறு விதமான ஆசாரம் அல்லது வழக்கமுள்ளவர்களுக்குக் கிடையாது. (6) மணமகளுக்கு 16 வயது பூர்த்தி யாகாமல் இருந்தால் இவ்விவாகத்திற்கு அவளுடைய கார்டியன் சம்மதம் கொடுத்திருக்க வேண்டும். கார்டியன்கள் முறையே பின் வருமாறு:—தகப்பன், தாய், தகப்பனைப் பெற்ற பாட்டன், சகோதரர், தகப்பனின் சகோதரர், தாயைப் பெற்ற பாட்டன், தாய்மாமன், வேறு அடுத்த நெருக்கமுள்ள உறவினர். சகோதரர், தகப்பனின் சகோதரர், தாய் மாமன், வேறு உறவினர்—இவர்களுள் ஒருவருக்குமேல் இருந்தால் பாதி ரத்தபாசமுள்ளவரைவிட, முழு ரத்தபாச முள்ளவருடையவும், ஒரே ரத்த பாசமுள்ளவர்களில் மூத்தவராக இருப்பவருடைய சம்மதமும் தான் வேண்டும். மற்ற உறவினர்கள் என்று சொல்லப்படுபவர்களில் யார் நெருங்கியவர் என்று பார்க்க, யார் அம்மைனருடைய சொத்துக்களுக்கு வார்சோ அவர்தான் கார்டியன் என்ற முறையில் சம்மதம் கொடுக்கக் கூடியவர். விவாகத்துக்கு சம்மதம் கொடுக்கக்கூடிய கார்டியனுக்கு 21 வயது பூர்த்தியாகி இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் இருப்பதாலோ, வேறு காரணங்களினுலோ ஒரு கார்டியன் தம் சம்மதத்தைக் கொடுக்க முடியாவிட்டால் மேலே சொன்ன வரிசையில் அடுத்தபடியாக இருப்பவர்தான் சம்மதம் கொடுக்க அதிகாரமுள்ளவர். கார்டியன் சம்பந்தப்பட்ட இவ்விதிகள் கார்டியன் அண்டு வார்டு சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டே. மேலும், கார்டியன் சம்மதம் கொடுத்தாலும், நடக்கவேண்டிய ஒரு திருமணத்தை மைனருடைய நன்மையை உத்தேசித்துத் தடுத்துவிடக் கோர்ட்டுகளுக்கு இருக்கும் அதிகாரம் அப்படியே இருக்கும்.

'தடுக்கப்பட்ட உறவு முறை' (Degrees of Prohibited Relationship) என்ருல் இரண்டு நபர்களில் ஒருவருக்கு மற்றவர் (தகப்பன் தாய் பாட்டன் பாட்டி போன்ற) மூதாதையாக இருந்தாலும் சரி; அல்லது ஒரு மூதாதையின் மனேவி அல்லது கணவனுகவோ, அல்லது (மகன் மகள்

187720

பேரன் பேத்தி போன்ற) சந்ததியின் மனைவி அல்லது கணவனாகவோ இருந்தாலும் சரி; இருவரும் சகோதர சகோதரிகளாக இருந்தாலும் சரி; ஒருவருடைய தாய் அல்லது தந்தைக்கு மற்றவர் சகோதரராகவோ சகோதரி யாகவோ இருந்தாலும் சரி; இருவரும் இரண்டு சகோதரர்களுடைய மக்களாக இருந்தாலும் சரி; அல்லது இருவரும் இரண்டு சகோதரிகளின் மக்களாக இருந்தாலும் சரி — இப்படி உறவு முறை உள்ளவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறையுடையவர்களாவார்கள்.

'ஸபிண்ட' உறவினர் என்றால் யார்?

மணமகன் அல்லது மணமகளை, முதல் தலை முறையாக வைத்து, தாய்வழியே மூன்று தலைமுறைகளும், தகப்பன் வழியே ஐந்து தலைமுறைகளும் கணக்குச் செய்ய வேண்டும். இருவருக்கும் பொதுவான மூதாதையானவர் மேற்கண்ட தலைமுறைகளுக்குள் இருந்தால் தம்பதிகள் இருவரும் 'ஸபிண்ட' உறவினராவார்கள். மணமகன், மணமகள் ஒவ்வொருவரையும் முதல் தலைமுறையாக வைத்து மேற்கண்டபடி கணக்குச் செய்து பார்க்கவேண்டும்.

இந்து விவாகத்துக்குரிய சடங்குகள்.

மணமக்கள் இருவருள் எவருடைய வழக்கப்படிக்கான சடங்குகள் அல்லது ஆசாரப்படிக்கும், விவாகத்தைப் பூர்த்தி செய்யலாம். அவ்விதமான சடங்குகளில் மணமக்கள் இருவரும் சேர்ந்து ஹோம அக்னி முன்பு ஏழு அடி எடுத்து வைப்பதாகிய 'ஸப்தபதி' என்பதும் சேர்ந்திருந்தால், ஏழாவது அடி எடுத்து வைத்ததும் அவ்விவாகம் பூர்த்தியானதாக ஏற்படும்.

இந்து விவாகங்களைப் பதிவும் செய்து கொள்ளலாம்.

இந்து விவாகங்கள் ருசுச் செய்யப்படுவதைச் சுலபமாகச் செய்யும் பொருட்டு இம்மசோதாவில் ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது, அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள் அபிப்பிராயப்பட்டால் 'இந்து விவாக ரிஜிஸ்டர்' என்று ஒரு புத்தகம் வைத்துக்கொண்டு அதில் இந்து விவாகங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம். இதற்காகத் தேவையான விதிகள் செய்து கொள்ள ராஜ்ய சர்க்கார்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படும். குறிப்பிட்ட இடங்களிலோ குறிப்பிட்ட வகை விவாகங்களையோ கட்டாயமாகவும் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்று இவ்விதிகள் வற்புறுத்தலாம். பதிவு செய்யாவிட்டால் ரூபாய் 100 வரை அபராதம் விதித்தும் விதிகள் செய்யலாம். இந்து விவாக ரிஜிஸ்தர்களை நியாயமான நேரங்களில் எவரும் பார்த்துக் கொள்ளலாம். எவரும் அதிலிருக்கும் விஷயங்களுக்கு நகல் வாங்கிக் கொள்ளலாம். அதிலடங்கிய விஷயங்கள் ருசுவாக ஏற்றுக்கொள்ளப்படும். இருந்தாலும், இவ்விதம் விவாக ரிஜிஸ்டரில் பதிவுசெய்து கொள்ளப்படவில்லை என்ற காரணத்தினால் மட்டில் எந்தத் திருமணமும் செல்லாமல் போய் விடாது.

மணவாழ்க்கை அல்லது தாம்பத்திய உரிமைகளைத் திருப்ப அடைவது

கணவன் மனைவி இருவர்களுக்குள் எவரேனும், நியாயமான காரணமின்றி, மற்றவருடன் சேர்ந்து இல்லாமல் விலகிக் கொண்டால், அதனால் துன்பமடைந்தவர் ஜில்லா கோர்ட்டுக்கு மனுப் போட்டு, தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடையலாம். அதாவது, கணவன் மனைவி இருவரும் சேர்ந்து மணவாழ்க்கை நடத்த வேண்டுமென்று ஜில்லா ஜட்ஜ் உத்தரவு செய்யலாம். சட்டப்படி மணமக்கள் பிரிந்து வசிக்க உரிமையுள்ளவர்களாகவோ, அல்லது அவர்களுடைய திருமணமானது வீண் என்றோ செல்லாதென்றோ இருந்தாலொழிய தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடைய மேற்கண்டபடி நீதிபதி உத்தரவு செய்வார். இவ்விதம் டிக்ரி ஏற்பட்ட இரண்டு வருடங்கள் சென்றும் மணவாழ்க்கை திரும்ப அடையப் படா விட்டால் அதுவே விவாகரத்துக்குப் போதுமான ஒரு காரணமாகும்.

மணமக்கள் (தம்பதிகள்) சட்டபூர்வமாகப் பிரிந்து கொள்வது.

(Judicial Separation)

மணமக்களில் எவரும், அவர்களுடைய திருமணம் இச்சட்டத்திற்கு முன்பே ஏற்

பட்டிருந்தாலும் சரி, பிறகு ஏற்பட்டிருந்தாலும் சரி, அடியிற் கண்ட காரணங்களினுல் தாங்கள் சட்ட பூர்வமாகப் பிரிந்த வாழ்க்கை நடத்த உரிமை வேண்டுமென்று கோரி ஜில்லா கோர்ட்டுக்கு மனுப் போடலாம். அம்மனுவின் பேரில் அவ்விதமே டிக்ரி ஏற்பட்டால், மனுதார் கணவனுக இருந்தாலும், மனைவியாக இருந்தாலும், மற்றவருடன் சேர்ந்து வசிக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆனுல் மணமக்கள் எவரும் தகுந்த காரணங்கள் காட்டி இவ்வித டிக்ரியை ரத்துச் செய்து கொள்ளலாம். சட்ட பூர்வமாகப் பிரிந்து கொள்வதற்குப் போதுமான காரணங்களாவன:-(1) மனுச் செய்பவரை மற்றவர் மனுவுக்கு முன் குறைந்தது 2 வருடங்களாக நியாயமான காரணங்களோ, சம்மதமோ இல்லாமல், அல்லது தாம் தடுத்தும் கேட்காமல் விட்டு விட்டுப் போய் விட்டாலும் (Desertion) (2) மனுதார் மற்றவருடன் வாழ்க்கை நடத்துவது அபாயமாக இருக்கக் கூடிய அளவுக்கு, மற்றவர் கொடூரமாய் நடந்திருந்தாலும் (3) மனுத் தேதிக்கு முந்திய ஒரு வருட காலத்திற்குக் குறையாமல் மற்றவர் குஷ்டரோகத்தாலோ(Leprosy) மேக வியாதியினுலோ (Venereal disease) பீடிக்கப் பட்டிருந்தாலும் (4) விவாகமான தேதியிலிருந்தே தொடர்ச்சியாக மற்றவர் சித்த சுவாதீன மற்றவராக இருந்தாலும் (5) விவாகமான பிறகு மற்றவர் விபசாரம் செய்திருந்தாலும்—இந்த ஐந்து சந்தர்ப்பங்களிலும் தம்பதிகளில் ஒருவர் மற்றவர் மீது மேற்கண்டபடி பிரிந்து கொள்ள மனுப்போடலாம். இவ்விதம் செய்து கொண்டாலும், கணவன் மனைவி என்ற உறவு அப்படியே தான் இருக்கும். மேற்கண்டபடி சட்ட பூர்வமாக டிக்ரி மூலம் பிரிந்து தனித்தனி வாழ்க்கை நடத்தும் மணமக்கள் இரண்டு வருடங்களுக்குள் மறுபடியும் ஒத்துக் கொண்டு மணவாழ்க்கை நடத்தாவிட்டால், அதுவே விவாக ரத்துச் செய்து கொள்ளப் போதுமான ஒரு காரணமாகும். இது பின்னுல் கவனிக்கப்படும்.

'மணமக்கள்' என்ற உறவை முடித்துக்கொள்ள மூன்று வகைகள்

மூன்று வகையான சந்தர்ப்பங்களில் கணவன் மனைவி என்ற தாம்பத்திய உறவை முடித்துக் கொள்ள இச்சட்டம் அனுமதிக்கின்றது:-(1) விவாகம் என்பதே வீண் அல்லது வியர்த்தமானது என்று டிக்ரி பெறுவது (Decree for Nullity) (2) விவாகம் செல்லாதென டிக்ரி பெறுவது (Decree of Invalidity of Marriage (3) விவாக ரத்துச் செய்து கொள்ளுவது. (Divorce) இம் மூன்று வகைப் பரிகாரங்களில் எதை அடைய வேண்டுமானுலும் மணமக்கள் எவரும் ஜில்லா கோர்ட்டுக்கு மனுப் போட வேண்டும். எந்த இடத்தில் அவர்களின் விவாகம் நடந்ததோ, அல்லது அவர்கள் சேர்ந்து எங்கே கடைசியாக வசித்து வந்தனரோ அந்த இடத்துக்கு அதிகாரமுள்ள ஜில்லா கோர்ட்டில் இவ்வித மனுக்களைப் போட வேண்டும். எந்த எந்த வெவ்வேறுன காரணங்கள் இருந்தால் எவ்வித மனுப் போட வேண்டுமென்றும் இச்சட்டத்திலேயே விளக்கப்பட்டிருக்கிறது. அவற்றைக் கவனிப்போம்.

விவாகம் என்பதே வீண் அல்லது வியர்த்தம் என்று மனுப் போடக் காரணங்கள்

இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன் விவாகம் நடந்திருந்தால் (1) விவாகம் நடந்த காலத்தில் மணமகனுக்கு ஒரு மனைவியோ, மணமகளுக்கு ஒரு கணவனே உயிருடன் இருந்திருந்தாலும் (2) தம்பதிகள் ஒருவருக் கொருவர் தடுக்கப்பட்ட உறவுமுறை உள்ளவர்களாக இருந்தாலும்—இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் விவாகம் என்ற சடங்கு ஒன்று மேலுக்கு ஏற்பட்டிருந்தாலும் சட்டப்படி யாதொரு விவாகமும் ஏற்படவில்லை. அதாவது, விவாகம் என்பது வீண் அல்லது வியர்த்தம் (Null and Void) என்று கோர்ட் மூலம் டிக்ரி ஆக வேண்டுமென்று மணமக்களில் எவரும் மனுப் போடலாம். ஆனுல் விவாகம் நடந்த போது அப்போது அமுலிலிருந்த சட்டப்படியோ, பழக்க வழக்கங்களின்படியோ அவ்வித விவாகங்

களும் செல்லுமென இருந்தால் இம்மனுப் போட முடியாது.

ஆனால் இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு ஏற்படும் விவாகங்கள் சம்பந்தப் பட்ட வரையில் மேற் கண்ட இரண்டு காரணங்கள் இருந்தாலும் சரி, அல்லது தம்பதிகள் 'சபிண்ட' உறவினர்களாக இருந்தாலும் சரி இம்மனுப்போடலாம்.

விவாகம் செல்லாதென மனுப் போடக் காரணங்கள்

இச்சட்டத்திற்கு முன் நடந்த விவாகங்கள் சம்பந்தப்பட்ட வரையில் (1) விவாக காலத்திலும் பிறகும் மனுத்தேதி வரையிலும் எதிர் மனுதார் நபும்சகராய் (Impotent) இருந்தாலும் (2) விவாக காலத்தில் எதிர்மனுதார் பைத்தியமாக இருந்தாலும், மூடராக இருந்தாலும்—மேற் கண்டபடி மனுப் போடலாம். இச்சட்டத்திற்குப் பின் விவாகம் நடந்திருந்தால்—(1) விவாக காலத்திலும் பிறகு மனுத்தேதி வரையிலும் எதிர் மனுதார் நபும்சகராக இருந்தாலும் (2) விவாக காலத்தில் எதிர் மனுதார் மூடராகவோ பைத்தியமாகவோ இருந்தாலும் அல்லது (3) விவாக காலத்தில் மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தியாகாமல் இருந்தாலும் (4) விவாகம் செய்து கொள்ள மனுதாருடைய சம்மதமோ, அல்லது 16 வயது பூர்த்தியாகாத மணமகளுடைய கார்டியனுடைய சம்மதமோ, பலவந்தமாகவோ (Force) மோசடியாகவோ (Fraud) வாங்கப்பட்டிருந்தாலும்—அவ்விதமான திருமணங்கள் செல்லாதெனச் செய்து கொள்ள மேற்கண்டபடி மனுப்போடலாம். ஆனால் மேலே கண்ட பலாத்காரமானது நீங்கிய ஒரு வருடத்திற்குப் பிறகோ, அல்லது மோசடியானது கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு வருடத்திற்குப் பிறகோ இம்மனுப் போட முடியாது. மேலும், பலாத்காரம் நீங்கிய பிறகோ அல்லது மோசடி கண்டு பிடிக்கப் பட்டபிறகோ மனுதார் தம் சுய சம்மதத்துடன் எதிர்மனுதாருடன், புருடன்—பெண்சாதியாக வாழ்ந்திருந்தாலும் இம் மனுப் போட முடியாது.

விவாக ரத்துக்கான காரணங்கள்

இச்சட்டத்திற்கு முன் விவாகம் நடந்திருந்தாலும், பிறகு நடந்திருந்தாலும் அடியில் கண்ட காரணங்களினால் விவாகத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று மணமக்களில் எவரும் ஜில்லா கோர்ட்டுக்கு மனுப்போடலாம். அதாவது (1) கணவன் ஒரு வைப்பாட்டியை வைத்திருந்தாலும் சரி; மனைவி வேறு ஒருவருடைய வைப்பாட்டியாக இருந்தாலும் சரி, அல்லது விபசாரத்தில் ஈடுபட்டுருந்தாலும் சரி (2) மணமக்களில் ஒருவர் இந்து மதத்தை விட்டு வேறு ஒரு மதத்தைத் தழுவி விட்டாலும் சரி (3) மணமக்களில் ஒருவர் மனுத் தேதிக்குக் குறைந்தது ஐந்து வருடத்திற்குக் குறையாமல் சிகிச்சையிலிருந்தாலும், சிகிச்சை செய்து தீராத விதம் சித்த சுவாதீனமற்றவராக இருந்தாலும் (4) மணமக்களில் எவரும் மனுத்தேதிக்குக் குறைந்தது ஒரு வருடத்திற்கு முன் முதல் குஷ்டரோகத்தால் பிடிக்கப் பட்டு வந்தாலும் (5) மணமக்களில் எவரும் உயிருடனிருந்தால் அது விஷயம் யார் யாருக்குத் தெரிந்திருக்கக் கூடுமோ, அவர்களே அவர் உயிருடன் இருக்கும் விஷயம் கேள்விப் படாமல் ஏழு அல்லது அதிகமான வருடங்கள் சென்று விட்டாலும் (6) மணமக்கள் இருவரும் சட்டரீதியாகப் பிரிந்திருக்கலாமென்று டிக்ரி ஏற்பட்ட இரண்டு, அல்லது அதிக வருடங்களாகவே, அவர்கள் மறுபடியும் சேர்ந்து மணவாழ்க்கை தொடங்காவிட்டாலும் (7) தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்ளுவதற்கான டிக்ரி ஒன்று ஏற்பட்டும் இரண்டு அல்லது அதிக வருடங்களாக அவ்விதம் செய்யாமலிருந்தாலும் இந்த ஏழு சந்தர்ப்பங்களில் மணமக்களில் ஒருவர் மற்றவர் மீது விவாகரத்து மனுப் போட்டு விவாகத்தை ரத்துச் செய்து கொள்ளலாம். தம்பதிகளில் இருவரில் எவர் மீது தவறு அல்லது குறைபாடு இருக்கிறதோ அவரே அதையே காரணமாகக் கண்டு விவாகரத்து மனுப் போட முடியாது. மேலும், விவாகம் நடந்து மூன்று வருடங்களுக்குள் எவரும் சாதாரணமாய் விவாக ரத்துச் செய்து

கொள்ள மனுப்போட முடியாது. ஆனல் விசேஷ சந்தர்ப்பங்களில் மூன்று வருடங்களுக்குள்ளும் விவாக ரத்து மனுப் போடுவதற்கான விதிகள் ஹைகோர்ட்டால் ஏற்படுத்தப்படும்.

விவாக ரத்துச் செய்து கொண்ட தம்பதிகளே மறுபடியும் விவாகம் செய்து கொள்ளலாம்.

விவாக ரத்து மனுவின் பேரில் விவாக ரத்து டிக்ரி ஏற்பட்டு, அதன் பேரில் அப்பில் இருந்தால் அதுவும் முடிந்து அல்லது அப்பீல் கெடுமுடிந்து பிறகு ஒரு வருடம் சென்ற பின் விவாக ரத்துச் செய்துகொண்ட அதே மணமக்கள் மறுபடியும் திருமணம் செய்துகொள்ளலாம்.

கோர்ட்டுகளின் அதிகாரங்கள்

விவாக சம்பந்தமான மனுக்கள் கோர்ட்டில் நடக்கும்போது மனைவியின் செலவுக்காகவும் ஜீவனத்திற்காகவும் கணவன் தொகைகள் கொடுத்து வரவேண்டுமென்று உத்தரவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. விவாகத்தை விபர்த்தமென்று செய்யவோ, செல்லாதென்று செய்யவோ, விவாகரத்துச் செய்யவோ போடப்படும் மனுக்களின்பேரில் டிக்ரி ஏற்படும்போதும் சரி, பிறகு அதற்காக என்றே மனுப்போட்டாலும் சரி, கணவனுவர், மனைவி ஒழுக்கத்துடனும் மறு விவாகம் செய்துகொள்ளாமலும் இருக்கும் வரை, அவளுக்கு நிரந்தரமான ஜீவனும்சம் கொடுத்து வரவேண்டுமென்றும் உத்தரவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. குழந்தைகளுடைய போஷணை, பாதுகாப்பு, படிப்பு முதலியவற்றைப் பற்றியும் கோர்ட்டுகள் யுக்தமான உத்தரவுகள் செய்யலாம். பொதுச் சொத்துக்கள் விஷயமாகவும் நியாயமான ஏற்பாடுகளைக் கோர்ட்டுகள் செய்யலாம். மனுக்களைப் பகிரங்கமாக விசாரிக்காமல் ரகசியமாக விசாரிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் ரகசியமாய் விசாரணை செய்யவேண்டுமென்று மனுதாரோ எதிர் மனுதாரோ கேட்கலாம். மனுக்களின் பேரில் ஏற்படும் டிக்ரிகளின் மீது அப்பீல் உண்டு.

இவைதாம் இம்மசோதாவின் முக்கிய ஷரத்துக்கள். இவைகள் பார்லிமெண்டு சபைகளுள் நுழைந்து வெளியில் வரும்போது எவை சட்டமாக வரும், எவை மறைந்துவிடும் என்பதைக் கவனித்து வருவோம்.

வாஞ்சூர் K. S. & CO.,

நாகூர் சோகை மருந்து

ஸ்தாபிதம்
1860

இது சோகை, முகம் வயிறு வீக்கங்கள், தீராத பாண்டு, கை கால் குடைச்தல், தொண்டை புகைச்சல், சிராணி போக்கு, நாள்பட்ட ஜுரம், சூதகக்கட்டு, அஜீரணம், மேக நீர், கண்ணில் திடீரென ஏற்படும் மறைவு முதலானவைகளை விரைவில் குணப்படுத்தி ரத்த விருத்தியை உண்டாக்குகிறது.

பலராலும் போற்றப்படுவது.

10 நாள் சாப்பிடக்கூடிய பெட்டி 1-க்கு விலை ரூ. 0—6—0

தயாரிப்பவர்கள்:-

வாஞ்சூர் K. S. & CO.,

49, மணிக்காரத்தெரு, :: கும்பகோணம்.

கல்யாண

பட்டுநூல்

ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க்

எம்போரியம்

★

119, பெரிய தெரு, :: கும்பகோணம்.



[இப் பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.]

மனம் போன போக்கில் முனிசிபாலிடியார் வீட்டு வரி விதித்தால் — அதை ரத்துச் செய்ய கோர்ட்டில் தாவா செய்யலாமா?

[ஆதாரம்:-1953(1) மதராஸ் லா ஜர்னல்-128]

முனிசிபாலிட்டிகளில் வீட்டு வரி அல்லது சொத்து வரி (Property Tax) விதிப்பதுபற்றி ஜில்லா முனிசிபாலிட்டி சட்டத்தில் சில விசேஷ விதிகள் இருக்கின்றன. சாதாரணமாக, வீட்டு வரி அல்லது சொத்து வரி என்பது அச் சொத்தின் வருட மதிப்பின் (Annual Value) ஒரு சதவிகிதமாகும். எவ்வளவு சதவிகிதம் வரியாக விதிக்கப்படவேண்டுமென்று முனிசிபல் கவுன்சில் சபைதான் முனிசிபாலிடி சட்டத்திற்கிணங்க, பொதுவாகத் தீர்மானிக்கவேண்டும். ஆனால் ஒரு குறிப்பிட்ட வீடு அல்லது சொத்தின் வருட மதிப்பு என்ன, அதற்கு வரி எவ்வளவு என்பதை முதலில் முனிசிபல் நிர்வாக அதிகாரி தான் நிர்ணயம் செய்யவேண்டும். 'வருட மதிப்பு' என்றால் என்ன என்று முனிசிபாலிடிச் சட்டத்தின் செக்ஷன் 82(2)ல் விளக்கப்பட்டிருக்கிறது. அதன்படி, அச் சொத்தை மாதா மாதாமோ, வருடா வருடமோ, வாடகைக்கு விட்டால் நியாயமாக எவ்வளவு வாடகை கிடைக்குமோ, அதில் கட்டடங்களுக்காக பட்டில் 10 சதவிகிதம் ரிப்பேர் முதலிய செலவுகளுக்காகத் தள்ளி, பாக்கித் தொகைதான் அச்சொத்தின் வருட மதிப்பாகும். அம் மதிப்பின் பேரில்தான் முன் சொன்னபடி ஒரு சதவிகிதத்தை அதன் வரியாக விதிக்க வேண்டும். ஒரு வீடு அல்லது சொத்திற்காக நிர்வாக அதிகாரி விதித்த வரியானது அதிகமாக இருக்கிறதென்று வீட்டுக்காரருக்குத் தோன்றினால், அவர் என்ன செய்யவேண்டுமென்றும் முனிசிபாலிடிச் சட்டத்தின் நான்காவது ஷெடியூலில் சில விதிகள் இருக்கின்றன. இவைகளின்படி வரி விதிப்பைத் திருத்த வேண்டுமென்று 30 நாட்களுக்குள் நிர்வாக அதிகாரிக்கே முதலில் 'ரிவிஷன்' மனுக் கொடுக்கலாம். அதில் நிர்வாக அதிகாரி செய்யும் உத்தாவின் மீதும் 15 நாட்களுக்குள் முனிசிபல் கவுன்சிலுக்கே அப்பீல் செய்யலாம். விதிக்கப்பட்ட வரியைக் கட்டிவிட்டுத்தான் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யவேண்டும்.

வரி விதிப்பு விஷயமான அப்பீலின் பேரில் முனிசிபல் கவுன்சில் சபையானது செய்யும் உத்தரவுதான் இவ் விஷயத்தில் முடிவானது என்றும் முனிசிபாலிடிச் சட்டத்திலேயே இருக்கிறது.

முனிசிபாலிடிச் சட்டத்தின் செக்ஷன் 354இல் என்ன இருக்கிறதென்றால் — வரி விதிப்புச் சம்பந்தமான இச்சட்ட வாசகத்தை உண்மையாகவும் நடைமுறையிலும் (In Substance and in effec.) பின்பற்றப்பட்டு ஏற்பட்டிருக்கும் ஒரு வரி விதிப்பானது சரி அல்ல என்று, எவரும் எந்தக் கோர்ட்டுகளிலும் ஆட்சேபிக்க முடியாதென்று ஒரு தடை இருக்கிறது. அதாவது, முனிசிபாலிடிச் சட்டத்திலும் விதிகளிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் முறையை அனுசரித்து, முனிசிபல் அதிகாரிகள் வீட்டு வரியை விதித்துவிட்டால் அவ்வரி அதிகமாக இருந்தாலும் தவறாக இருந்தாலும் அதை ஆட்சேபிக்க முனிசிபாலிடி சட்டப்படி ரிவிஷன் அல்லது கவுன்சிலுக்கே அப்பீல் செய்யலாமே ஒழிய, சிவில் கோர்ட்டுகளில் ஒருவரும் தாவா செய்ய முடியாது என்பதுதான் இத் தடை.

அப்படியானால், முனிசிபல் அதிகாரிகளும் சரி, கவுன்சிலும் சரி, தம் இஷ்டப்படி யதேச்சாதிகாரமாகவோ, கண்மூடித்தனமாகவோ ஒரு வீட்டிற்கு மனதுக்குத் தோன்றியபடி வரியை விதித்து விட்டால், வீட்டுக்காரர் அதை ரத்துச் செய்ய சிவில் கோர்ட்டில் தாவா செய்ய முடியுமா, முடியாதா என்ற பிரச்னைதான் இவ் வழக்கில் முடிவு செய்யப்பட்டது.

வழக்கின் விபரம்:—கோயமுத்தூர் முனிசிபாலிடியார், ஒரு வீட்டிற்கு வருட மதிப்பானது ரூ. 4,440 என்று மதிப்புப் போட்டு அதற்கான வீட்டு வரியை விதித்தனர். இவ் வீட்டுக்காரர் இவ்வரியை ஆட்சேபித்து முனிசிபல் கவுன்சிலுக்கு அப்பீல் ஒன்றும் செய்யவில்லை. வரியும் அவரிடமிருந்து வசூல் செய்யப்பட்டது. அதிகமான வரி வசூல் செய்யப்பட்டு விட்டதாகவும் அது தமக்கு முனிசிபாலிடியாரிடமிருந்து திருப்பக் கிடைக்க வேண்டுமென்றும் வீட்டுக்காரர் முனிசிபாலிடிமீது சப்-கோர்ட்டில் தாவா செய்தார். அவருடைய வீட்டிக்கு ஜாகை வாடகைக் கட்டுப்பாடு சட்டப்படி நியாய வாடகை மாதம் ஒன்றுக்கு ரூ. 150 தான் என்று ஜில்லா கலெக்டரால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், முனிசிபல் கவுன்சில்களின் டிப்டி இன்ஸ்பெக்டர் என்ற அதிகாரியாலும் அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் அதன்படி சில கழிவுகள் போக அவ்வீட்டின் வருட மதிப்பு ரூ. 1665 தான் என்றும், அதற்கு அரை வருடத்திற்கு வீட்டு வரி ரூ. 124-14-0 தான் என்றும்; அத்தொகைக்கு மேல் அதிகமாக முனிசிபாலிட்டியால் தம்மிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகையானது தமக்குத் திரும்பக் கிடைக்கவேண்டுமென்றும் வாதியின் தாவா.

முனிசிபாலிட்டியார் கட்சி சொன்னார்கள். மற்ற அதிகாரிகள் செய்திருக்கும் உத்தரவுகளைத் தாங்கள் பின்பற்ற வேண்டியதில்லை என்றும். முனிசிபல் சட்டத்தில் கண்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்து ஒரு வீட்டிற்கு வருட மதிப்பு என்ன என்பதைத் தாங்கள் தான் நிர்ணயம் செய்யவேண்டுமென்றும், அவ்விதம் முனிசிபாலிட்டியார் விதித்த வரியானது அதிகமாகவோ தவறாகவோ இருந்தாலும், முனிசிபாலிட்டிச் சட்டப்படி வீட்டுக்காரர் முனிசிபல் கவுன்சிலுக்கு அப்பீல் செய்வதைத் தவிர அவருக்கு வேறு வழி ஒன்றுமில்லை என்றும், இவ்விஷயத்தை விசாரிக்க சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமே இல்லை என்றும், செக்ஷன் 354இல் இருக்கும் தடையை எடுத்துக்காட்டி, முனிசிபாலிட்டியார் கட்சியாடினர்.

இவ்வழக்கை விசாரிக்க சிவில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்று அபிப்பிராயப்பட்டு, சப்-ஜட்ஜ் வாதியின் வழக்கைத் தள்ளிவிட்டார். அதன் பேரில் ஜில்லா ஜட்ஜுக்கு வீட்டுக்காரர் அப்பீல் செய்தார். ஜில்லா ஜட்ஜ் வாதிக்குத் தீர்ப்பளித்தார். அதாவது இவ்வழக்கை, சிவில் கோர்ட்டில் விசாரிக்கலாமென்றும், முனிசிபாலிட்டியார் செய்தது தவறு என்றும் அபிப்பிராயப்பட்டு அவர்கள் அதிகமாக வசூல் செய்த தொகையை வாதிக்குத் திருப்பிக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். அதன் பேரில் முனிசிபாலிட்டியார் சென்னை ஹைகோர்ட்டுக்கு இரண்டாவது அப்பீல் செய்தனர். ஹைகோர்ட்டில் ஜில்லா ஜட்ஜின் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது.

அவ்வீட்டின் வாடகை விஷயமாய் ஜில்லா கலெக்டர், டிப்டி இன்ஸ்பெக்டர் இவர்கள் செய்திருக்கும் உத்தரவுகளை முனிசிபாலிட்டியார் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்றும்; அப்படிச் செய்யாமல் மனம் போன போக்காகப் பொறுப்பற்ற முறையில் (Capricious and arbitrary) முனிசிபாலிட்டியார் செய்வதானது முனிசிபல் சட்ட வாசகத்தை உண்மையாகப் பின்பற்றிச் செய்யும் ஒரு காரியமாகாதென்றும்; ஆகையால் இதைக் கோர்ட்டுகள் ரத்துச் செய்ய, செக்ஷன் 354இல் யாதொரு தடையும் இல்லை என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். அத்துடனில்லை. வீட்டுக்காரர் முனிசிபாலிட்டிச் சட்டப்படி முனிசிபல் கவுன்சிலுக்கு அப்பீல் செய்யாவிட்டாலும் பாதகமில்லை; சிவில் கோர்ட்டில் இவ்வித வழக்கைப் போடலாமென்றும் உயர்நீதிபதி அவர்கள் இவ்வழக்கில் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர்.

சங்கரனுடைய முதல் மனைவி இறந்து விட்டாள். அவளுடைய தகப்பன் சொத்தை அடைய அவளுக்கும் தமக்குமாக ஒரு மகனை அவர் சுவீகாரம் செய்துகொண்டார். ஆனால் அப்பொழுது சங்கரனுக்கு இரண்டாவது மனைவி இருந்தாள். சுவீகார மகனுக்குத் தாய் யார் ?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—மதராஸ் ஹைகோர்ட்—132]

'சுவீகாரம்'—என்பது இந்துச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கற்பனை. சுவீகார மகன் என்பவன் எல்லாவிதத்திலும் உண்மை மகனைப் போலவேதான், என்ற ஒரு கற்பனையை ஆதாரமாக வைத்துக்கொண்டு சுவீகார மகன் சம்பந்தமாகப் பல தீர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன.

சுவீகாரம் செய்துகொள்ளும் இந்துவுக்கு உண்மையாக ஒரு மகன் பிறந்தால் எப்படியோ, அப்படியேதான் சுவீகாரத்தின் மூலம் தோன்றும் மகனும். சுவீகாரத் தகப்பனுடைய மனைவியேதான் சுவீகார மகனுக்குத் தாய் ஆவாள். மனைவி இறந்த பிறகு ஒருவர் சுவீகாரம் செய்துகொண்டால், இறந்த அம்மனைவிதான் சுவீகார மகனுடைய தாயாகப் பாவிக்கப்படும். இறந்த முதல் மனைவியின் மகன் என்ற முறைமையில் சொத்துக்களை வார்சாக அடையவும் சுவீகார மகனுக்கு உரிமை உண்டு — என்பதுதான் சட்டம்.

இச்சட்டத்தை மனதில் வைத்துக்கொண்டுதான் சங்கரன் சுவீகாரம் செய்துகொண்டிருக்க வேண்டும். சங்கரனுடைய முதல் மனைவியின் பெயர் சங்கரி அம்மாள். அவளுடைய தகப்பனுக்குப் பிள்ளை இல்லை. ஏராளமான சொத்துக்கள் இருந்தன. அத்தகப்பன் 1927 இல் இறந்தார். பிள்ளை இல்லையாகையால் இறந்தவருடைய மனைவி, அதாவது, சங்கரி அம்மாளின் தாய், அச்சொத்துக்களுக்கு வார்சானள். அவளும் 1941 இல் இறந்துவிட்டபடியால், தகப்பன் சொத்துக்களை மகள் என்ற வார்சு முறைமையில் சங்கரி அம்மாளே அடைந்தாள். ஆனால் இந்தச் சட்டப்படி சங்கரி அம்மாளுக்குத் தன் தகப்பன் சொத்தை ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்தியம் தான். அவளுக்கு ஒரு மகன் இருந்தால், அவள் இறந்த பிறகு இச்சொத்துக்கள் எல்லாவற்றிற்கும் அம்மகனேதான் வார்சு ஆவான். ஆனால் மகன் பிறக்கவில்லை. சங்கரி அம்மாளும் 1943 இல் இறந்துவிட்டாள். சொத்துக்கள் யாவும், அவளுடைய தகப்பனைப் பெற்ற தாயார் அப்பொழுது உயிருடன் இருந்தபடியால் அவளுக்கு வார்சு முறைமையில் போயிற்று. அவளும் இறந்த பிறகு எல்லாச் சொத்துக்களையும் அடைய அனந்தர வார்சுகள் தயாராகக் காத்துக்கொண்டிருந்தனர்.

இந்த நிலைமையில்—இறந்த சங்கரி அம்மாளுக்கு உண்மை மகன் பிறக்காவிட்டால் என்ன? தாம் ஒரு மகனைச் சுவீகாரம் செய்துகொண்டுவிட்டால் அம்மகனே சங்கரி அம்மாளுக்கும் மகனாகி விடுவான். சொத்துக்கள் யாவும் சுவீகார மகனுக்குத் திரும்பி விடுமென்று சங்கரன் நினைத்து 1944இல் அவர் ஒரு சுவீகாரம் எடுத்துக்கொண்டார்.

ஆனால் அதற்குள் சங்கரன் ஒரு இரண்டாவது மனைவியைக் கலியாணம் செய்துகொண்டிருந்தார். அதாவது, சங்கரன் சுவீகாரம் செய்து கொள்ளும்போது அவருடைய இளைய மனைவி உயிருடன் இருந்தாள். இச்சுவீகார மகன் இளைய மனைவிக்கு மகனாக வருவதில் ஒன்றும் உபயோகமில்லை. இறந்த முதல் மனைவி சங்கரி அம்மாளின் மகனாக வந்தால்லவா அவளுடைய ஏராளமான சொத்துக்களை வார்சாக அடைய முடியும்? ஆகையால் சங்கரன் ஒரு முயற்சி செய்தார். அதாவது, தாம் எடுத்துக்கொள்ளும் சுவீகார மகனுக்கு, இறந்த தம்முடைய முதல் மனைவி சங்கரி அம்மாளேதான் தாய் ஆவாள் என்று குறிப்பிட்டு அச்சுவீகாரம் செய்துகொண்டார்.

அனந்தரவார்சுகள் இச்சுவீகாரம் செல்லாதெனவும், தாங்கள்தான் சங்கரி அம்மாளின் தகப்பனுடைய சொத்துக்களுக்கு அடுத்த வார்சுகள் என்றும் கோர்ட்டில் தாவா செய்தனர்.

சங்கரன் எடுத்துக்கொண்ட சுவீகார மகன், இறந்த முதல் மனைவி சங்கரி அம்மாளுக்கும் மகனாகச் சட்டத்தில் ஏற்படுமானால், சொத்துக்கள் யாவும் 'தௌஹித்திர' பாத்தியப்படி அச்சுவீகார மகனுடையதே. ஆனால் அப்படி ஏற்படாதென்று நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். முதல் மனைவி இறந்த பிறகு வேறு மணம் செய்துகொள்ளாமல் சங்கரன் சுவீகாரம் செய்துகொண்டிருந்தால் அம்மகன் இறந்த மனைவிக்கும் மகனாவான். ஆனால் சங்கரன் சுவீகாரம் எடுத்துக்கொள்ளும்போது அவருடைய இரண்டாவது மனைவி உயிருடன் இருந்தபடியால் அவளைத்தான் சுவீகார மகனுக்குத் தாய் என்று சட்டம் பாவிக்கும் என்றும், அவள் இருக்கும்போது இறந்த மனைவியைத் தாயாகக் குறிப்பிட்டுச் சுவீகாரம் செய்துகொள்ளுபவருக்கு அதிகாரமில்லை என்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

சங்கரன்செய்து கொண்ட சுவீகாரம் என்பது செல்லும். ஆனால் அம்மகன் இறந்த சங்கரி அம்மாளுடைய மகன் ஆகமாட்டான் — [illegible] ஏற்பட்டது. சொத்துக்கள் அனந்தரர்களை அடைந்தன.

விவசாயிகள் கடன்பற்றிய ஒரு முக்கிய தீர்ப்பு. ‘அசல் வட்டிக்கு’ என்று பிராமிசரி நோட்டில் செல் வைத்த பிறகு கணக்குத் தீர்த்துப் புதிய நோட்டு எழுதிக் கொடுத்தால் — சட்டம் என்ன?

[ஆதாரம்:—66 லா வீக்லி-113.]

சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தின் (Madras Agriculturists Relief Act-1938) செக்ஷன் 8இல் கண்ட ஷரத்திற்கு 1948ஆம் வருடத்திய திருத்தச் சட்டத்தால் விவரணம் (1) என்று ஒரு ஷரத்துச் சேர்க்கப்பட்டது. அதாவது, 1—10—1932க்கு முன் ஏற்பட்ட கடனுக்காக ஒரு விவசாயி திரும்பக் கொடுக்கும் தொகையானது வட்டிக்காகத்தான் கொடுக்கப்பட்டதென்று கடனாளியால் வியக்தமாக எழுத்து மூலம் எழுதப்பட்டிருந்தாலொழிய அத் தொகையை அசலில் தான் கழித்துக்கொள்ள வேண்டுமென்று ஒரு விவரண ஷரத்துச் சேர்க்கப்பட்டது.

அதாவது, இவ்விதக் கடன்களுக்காகக் கடனாளி திருப்பிக் கொடுக்கும் தொகைகளைப் பொதுவாகவோ அல்லது ‘அசல் வட்டிக்காக’ என்றோ பத்திரத்தில் செல் வைத்திருந்தால், அத் தொகைகள் எல்லாம் அசல் தொகையிலேயே ஈடு செய்துகொள்ளப்பட வேண்டுமென்பதுதான் இந்த ஷரத்தின் நோக்கம்.

பிரஸ்தாப வழக்கில், ஒரு விவசாயி 12—11—1921ல் ஒருவரிடம் ரூ. 2000 கடன் வாங்கி, அதற்காக ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருந்தார். இந்தப் பிராமிசரி நோட்டுக்காகக் கடன் வாங்கியவர் ஒன்பது தடவைகளில் தொகைகள் கொடுத்திருந்தார். இவை எல்லாவற்றையும் நோட்டில் செல் எழுதியிருந்தார். இதில் ஐந்து வரவுகளில் ‘அசல் வட்டிக்காகச் செல்லு’ என்று கண்டிருந்தார். அதாவது, வட்டிக்காக என்று வியக்தமாக குறிப்பிடப்படவில்லை. பிறகு 14-7-1929-இல் அவர்கள் ஒருவருக்கொருவர் கணக்குத் தீர்த்துக் கொண்டு (Settlement of Accounts) அன்று பாக்கி ஏற்பட்ட அசல் ரூபாய் 1658க்குக் கடனாளி ஒரு புதிய பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தார். இந்தப் பிராமிசரி நோட்டுக்காகத் தாம் எவ்வளவு பாக்கி கொடுக்க வேண்டியதென்று கோர்ட் மூலம் நிர்ணயம் செய்து கொள்ளுவதற்காகக் கடனாளியானவர், விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டப்படி, அப்பிராமிசரி நோட்டை ‘மேடோவர்’ பெற்றவர் மீது கோர்ட்டில் மனுப் போட்டார். ‘அசல் வட்டிக்கு’—என்று செல் எழுதி ஐந்து தடவைகளில் தாம் கொடுத்திருக்கும் ஜாடா தொகைகளையும், மேலே கண்ட திருத்தச் சட்டப்படி, அசலுக்காகவேதான் உளவடைத்துக் கொள்ள வேண்டுமென்பது அவருடைய கட்சி. இந்த ஐந்து தொகைகளையும் வட்டிக்காகவே உளவடைத்துக் கொண்டு தான், கடனாளியானவர் கணக்குத் தீர்த்து 1929ல் புதிய பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருப்பதால், இத் தொகைகளை அசலில் கழித்துக் கொள்ளக் கூடாதென்பதுதான் கடன் கொடுத்தவருடைய கட்சி.

கடைசியாக, இவ் வழக்கை விசாரித்த சென்னை ஹைகோர்ட்டின் மூன்று உயர் நீதிபதிகள் அடங்கிய நிறை மன்றத்தால், இக்கட்சியே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது, கடனாளியானவர் கணக்குத் தீர்த்தபோது தாம் கொடுத்த தொகைகளை எல்லாம் வட்டிக்காகவும் அசலின் ஒரு பாகத்திற்காகவும் கழித்துக் கொண்டு பாக்கி ஏற்பட்ட அசலுக்குத்தான் புதிய பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்திருப்பதால், கணக்குத் தீர்ப்பதற்கு முன் கடனாளியால் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு 1948ஆம் வருடத்திய திருத்தச் சட்டத்தில் கண்ட 1ஆவது விவரணம் பொருந்தாதென நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டு, தீர்ப்பளித்தனர்.

அதாவது, ‘அசல் வட்டிக்கு’ என்று பொதுவாகச் செல் வைத்ததுடன் நின்றிருந்தால் இத்தொகைகள் எல்லாம் (செக்ஷன் 8-விவரணம் 1-ன்படி) அசல் தொகையிலேயே ஈடு செய்து கொள்ளப்படும் அப்படிப் பொதுவாகச் செல் எழுதிய பிறகு, கணக்குத் தீர்த்து அசல் பாக்கி எவ்வளவு என்று நிர்ணயம் செய்து கொண்டால், பொதுவாகக் கொடுக்கப்பட்ட அத்தொகைகளைக் கடனாளியே வட்டிக்காக ஈடுசெய்து கொள்ளும்படி வியக்தமாகச் சொல்லுவது போலவேதான் ஏற்படும். கணக்குத் தீர்த்துக்கொண்டதைக் கலைத்து மறுபடியும் பரிசீலனை செய்யச் சட்டம் இடம் கொடுக்கவில்லை. என்று, உயர்நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

இந்திய அரசியல் அமைப்பில் எந்தத் தொழிலை நடத்தவும் மக்களுக்கு ஒரு ஜீவாதார உரிமை உண்டு. ஆனால் ஒருவர் நடத்தும் தொழிலை நிறுத்த அவருக்கு உரிமை கிடையாதா?

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—சென்னை ஹைகோர்ட் 98.]

தொழில் நடத்துபவர்களின் உரிமைகளை நிர்ணயிக்கும் மிக முக்கியமான தீர்ப்பு ஒன்று இவ்வழக்கில் அளிக்கப்பட்டிருக்கிறது.

'இந்தியன் மெடல் அண்டு மெடலர்ஜிகல் கார்ப்பொரேஷன்' என்ற கம்பெனியார் மேட்டூரில் பித்தளை, செம்பு, அலுமினியம் தகடுகளைச் செய்வதிலும் வேறு தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களுக்குச் சென்னையைச் சேர்ந்த தொண்டியார் பேட்டையிலும் ஒரு தொழிற்சாலை இருக்கிறது. அங்கே பித்தளைப் பாத்திரங்களும் 'ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்' பாத்திரங்களும் செய்யப்பட்டு வந்தன. இவர்கள் இத்தொழிற்சாலையை 17-2-1951 உடன் மூடிவிடப்போவதாக இரண்டு வாரங்கள் முன்னதாகவே அத்தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு அறிவித்து நோட்டீஸ் போட்டிருந்தனர். அந்நோட்டீசில் தொழிற்சாலையை மூடுவதற்கான காரணங்களையும் கண்டிருந்தனர். மேட்டூர் தொழிற்சாலை மூடப்பட்டுவிட்டதால் தகடுகள் கிடைக்கவில்லை என்றும், வெளிநாடுகளில் ஏற்பட்ட சம்பவங்களால் தொழிற்சாலையை நீடித்து நடத்த முடியவில்லை என்றும்; மேலும் அதிகச் செலவில்லாமல் உற்பத்தி செய்ய இன்னும் யந்திரங்கள் வேண்டியிருப்பதாயும்; ஆகையால் கால வரம்பு எதுவுமில்லாமல் அத்தொழிற்சாலையை அவர்கள் மூடப்போவதாகவும் நோட்டீசில் கண்டிருந்தனர். தொழிலாளர்களுக்குள்ள சம்பளத்தைக் குறிப்பிட்ட தேதிகளில் பெற்றுக்கொள்ளும்படியும் அதில் கண்டிருந்தனர். தொழிலாளர்களில் பெரும்பாலோர் சம்பளப் பாக்கியை வாங்கிக்கொள்ள வரவில்லை. தொழிலாளர்களின் யூனியன் மூலம் அவர்கள் இவ்விஷயத்தைச் சர்க்காருக்கு தெரிவித்ததன் பேரில் தொழில் தகராறுச் சட்டப்படி சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டனர். அதாவது இக் கம்பெனியாருக்கும் அவர்களுடைய தொழிலாளர்களுக்குமிடையே தகராறு ஏற்பட்டிருப்பதாயும் அதை விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும்படிக்கும் சென்னைத் தொழில் கோர்ட்டுக்கு இத்தகராறை அனுப்பினர். இக்கம்பெனியார் தங்கள் தொழிற்சாலையை 17-2-1951 முதல் மூடியது சரியா என்ற பிரச்சினையையும் வேறு சில தகராறுகளையும் பற்றி அக்கோர்ட்டார் முடிவு செய்யும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருந்தனர்.

இவ்வுத்தரவை அனுசரித்து, சென்னைத் தொழில் கோர்ட்டானது இத்தகராறை விசாரணை செய்தது. தொழிற்சாலையை மூடுவதற்கான காரணங்களை இத்தொழில் கோர்ட்டானது சாங்கோபாங்கமாக் அலசியது. கம்பெனியார் இத்தொழிற்சாலையை மூடுவதற்கான காரணங்கள் சரியானதல்ல என்று கடைசியில் தொழில் கோர்ட் அபிப்பிராயப்பட்டது. இன்னும் கொஞ்ச காலத்திற்கு வேலை நடத்தப் போதுமான ஸ்டீல் தகடுகள் அவர்களிடம் இருப்பதாயும்; பித்தளைத் தகடுகள் தங்களிடம் இல்லாவிட்டாலும் அவற்றை வெளியே வாங்கி தொழிலாளர்களுக்கு வேலைகொடுத்து வரலாமென்றும்; புதிய யந்திரங்கள் வந்தால் பிறகு வரட்டும் அதற்குள் இத்தொழிலை ஏன் நிறுத்த வேண்டும் என்றும்; மேட்டூரில் இருக்கும் தொழிற்சாலை நஷ்டப்பட்டு போனாலும் இத்தொழிற்சாலைக்கு அப்படி ஒன்றும் நஷ்டம் வரவில்லை என்றும் தொழில் கோர்ட்டானது அபிப்பிராயப்பட்டது. ஆகையால் இத் தொழிற்சாலையை மூடுவதற்காகக் கம்பெனியார் சொல்லும் காரணங்கள் ஒன்றும் சரியானதல்ல என்றும் அவர்கள் அதை நீடித்து நடத்த வேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு 17-2-1951 முதல் நீடித்துச் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும் வேறு சில விஷயங்களைப் பற்றியும் தொழில் கோர்ட் தீர்ப்புச் செய்தது.

இவ்விதம் தீர்ப்பு செய்யத் தொழில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்று கம்பெனியார் சென்னை ஹைகோர்ட்டில் 'ரிட்' மனுக் கொடுத்து அத்தீர்ப்பை ரத்துச் செய்யும்படி பிரார்த்தித்தனர்.

சென்னை ஹைகோர்ட்டில் இது சம்பந்தமான அமெரிக்க நீதிபதிகளின் அபிப்பிராயங்களும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலிருக்கும் ஷரத்துக்களும் ஆராய்ச்சி செய்யப்பட்டன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 19 (1) g ஷரத்தில் — ஒவ்வொரு இந்தியப் பிரஜையும் தமக்கு இஷ்டப்பட்ட தொழிலையோ வியாபாரத்தையோ நடத்தலாமென்று ஒரு ஜீவாதார உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. இதற்கு அர்த்தம் என்ன? ஒரு தொழிலை ஆரம்பித்து நடத்த உரிமை இருக்கிறதென்றால், அதை நிறுத்தவும் உரிமை உண்டு என்பது தானே அதற்கு அர்த்தம். ஆகையால் ஒருவர் இஷ்டப்பட்டால் ஒரு தொழிலைச் செய்யவும்

இஷ்டப்பட்ட போது அதை நிறுத்தி விடவும் அவருக்கு உரிமை இருக்கிறது. எப்படி ஒருவரைச் சொத்து வாங்கத்தான் வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாதோ அதைப்போலவே அவர் ஒரு தொழிலை நடத்தித்தான் ஆகவேண்டுமென்றும் அவரைக் கட்டாயப்படுத்த முடியாது. ஒருவர் நடத்தும் தொழிலைப் பற்றிப் பொதுமக்களின் நன்மைக்காகத் தேவையான நிபந்தனைகளை ஏற்படுத்த மட்டில் அரசாங்கத்திற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குறிப்பிட்ட தொழிலை நீடித்து நடத்திவர வேண்டுமென்று எவரையும் வற்புறுத்த அரசாங்கத்திற்கு உரிமை இல்லை. அது அவருடைய சொந்த விஷயம். அவருடைய இஷ்டம். ஆகையால் ஒருவர் தொழில் நடத்தும்போது அவருக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்படும் தகராறுகளை விசாரிக்க, தொழில் தகராறுச் சட்டப்படி தொழில் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக்கிறதே ஒழிய, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருவதற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ ஒருவர் இஷ்டப்படாவிட்டாலும் அவர் நடத்தும் தொழிலை நீடித்து நடத்தித்தான் வரவேண்டுமென்று சொல்ல தொழில் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். அவ்விதம் உத்தரவு செய்த தொழில் கோர்ட் தீர்ப்பானது மக்களின் ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதால் அது ரத்துச் செய்யப்பட்டது.

டிக்ரி பெற்றவர் தவறுதலாக தம்முடைய சொத்தையே கோர்ட்டு ஏலத்துக்குக் கொண்டு வந்து விட்டார்! வேறு ஒருவரும் அச்சொத்தை ஏலத்தில் வாங்கி விட்டார்.

[ஆதாரம்:—1953 ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—கல்கத்தா—125]

இது ஒரு விசித்திரமான வழக்கு. பிரதிவாதி பேரில் டிக்ரி பெற்ற வாதியானவர் டிக்ரித் தொகையை வசூல் செய்யப் பிரதிவாதியின் சொத்தையல்லவா கோர்ட் மூலம் ஜப்தி செய்து ஏலம் போடவேண்டும்? இவ்வழக்கின் வாதி அப்படிச் செய்யவில்லை. தவறுதலாகத் தம்முடைய சொத்தையே அவர் கோர்ட்டு ஏலத்துக்குக் கொண்டுவந்து விட்டார். அத்துடன் இல்லை. அச்சொத்தைக் கோர்ட் ஏலத்தில் வேறு ஒரு மூன்றாம் மனிதரும் வாங்கிவிட்டார்.

பிறகுதான் வாதி விழித்துக் கொண்டார். தாம் தவறுதலாகத் தம்முடைய சொத்தையே ஏலத்துக்குக் கொண்டுவந்துவிட்டபடியால் அக்கோர்ட்டு ஏலத்தை ரத்துச் செய்யவேண்டுமென்று அவர் கோர்ட்டுக்கு மனுக்கொடுத்தார். கீழ்க்கோர்ட்டானது தவறுதல் செய்த அவருடைய மனுவை ஏற்றுக்கொண்டு ஏலத்தை ரத்துச் செய்தது. அதன்பேரில் நடந்த அப்பீலிலும் அத்தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது. ஆனால் கோர்ட் ஏலத்தில் அச்சொத்தை வாங்கியவர் விடவில்லை. அவர் அத்தீர்ப்புகள் தவறானவையென்றும் அவற்றைப் பரிசீலனை செய்யதேண்டுமென்றும் கல்கத்தா ஹைகோர்ட்டுக்கு மனுக் கொடுத்தார்.

ஹைகோர்ட்டார் கீழ்க் கோர்ட் தீர்ப்புகள் தவறானவையென்று அபிப்பிராயப் பட்டு, கோர்ட் ஏலத்தை ரத்துச் செய்ய முடியாதெனத் தீர்ப்பளித்தனர். ஏனென்றால், அச்சொத்தை வாதி ஏலத்துக்குக் கொண்டுவந்த செய்கையானது: "இச்சொத்தை எவரும் ஏலத்தில் வாங்கலாம். இது பிரதிவாதியின் சொத்து. இந்த நிறைவேற்றுதல் நடவடிக்கையில் இது ஏலம் போகக்கூடிய சொத்தே"—என்று வாதியானவர் நம்பிக்கையூட்டி யாவரையும் அறைகூவி அழைப்பது போலாகும். அதை நம்பித்தான் வேறு ஒருவர் அச்சொத்தை வாங்கி, தம் நிலைமையை மாற்றிக்கொண்டு விட்டார். அதற்குப்பின் வாதியானவர் 'நான் முன்பு சொன்னது தவறு'—என்று சொல்லிக்கொள்ளச் சட்டம் அவரை அனுமதிக்காது. ஏனென்றால், இவர் முதலில் சொன்னது உண்மை என்று நம்பியல்லவா வேறு ஒருவர் ஒரு காரியத்தில் இறங்கிவிட்டார். இவ்விதமான சந்தர்ப்பங்களில் முதலில் அவர் சொன்ன விஷயங்களை அவரே மாற்றாமல் சட்டமானது அவருடைய வாயைப் பூட்டி விடும். மாறுதலாக அவர் சொல்லும் விஷயங்கள் உண்மையாக இருந்தாலும் சட்டத்தின் காதில் அவை விழா. இதற்கு ஆங்கிலத்தில் 'தடை' (Estoppel) என்று பெயர். முக்கியமான நீதிபரிபாலன விதிகளில் இதுவும் ஒன்று.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில் தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவது இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

28. கேள்வி: (ராஜகோபால்—தொளார்) ஆண் சந்ததி இல்லாத இந்து ஒருவர் இறந்துவிடுகிறார். அவருக்கு மனைவியும், சந்ததி இல்லாத விதவைப் பெண்ணும், இறந்த சகோதரியின் மகனும் இருக்கிறார்கள். இறந்தவருடைய சொத்துக்களுக்கு வார்சுகள் யார்?

பதில்: மனைவியோ, விதவைப்பெண்ணோ சுவீகாரம் ஒன்றும் செய்து கொள்ளாவிட்டால் இறந்த இந்துவின் சொத்துக்களை அவருடைய மனைவியே முதலில் வார்சாக அடைவாள். ஆனால் சாதாரணமாக அவள் அச்சொத்துக்களைத் தன் ஆயுள்வரை தான் அனுபவிக்கலாம். அவள் இறந்த பின் மகள் வார்சாவாள். அவளும் தன் ஆயுள்வரை தான் சொத்துக்களை அனுப்பவிக்கலாம். அவள் இறந்த பிறகு சகோதரி மகன் தான் வார்சாவான். அவன் இச்சொத்துக்களை விற்கச் சுடப்பாத்தியங்களுடன் சர்வ சுதந்தரமாய் அடைவான்.

ஆனால் இறந்தவருடைய மனைவி சட்டப்படி ஒரு மகனைச் சுவீகாரம் செய்து கொண்டால், இறந்தவருடைய சொத்தில் பாதியை மனைவியும், மற்றப்பாதியை சுவீகாரமகனும் அடைவார்கள். மனைவி ஆயுள்வரை அப்பாதியை அனுபவித்த பிறகு அப்பாதியும் சுவீகாரமகனையே தான் சேரும். அப்படியானால் பெண்ணுக்கும், சகோதரி மகனுக்கும் வார்சு பாத்தியமே வராது.

மனைவி சுவீகாரம் செய்துகொள்ளாமல், விதவை மகள் தனக்கு ஒரு மகனைச் சட்டப்படி சுவீகாரம்செய்து கொண்டால், முதலில் மனைவி தன் ஆயுள்வரை சொத்துக்களை அனுபவிப்பாள். அவள் இறந்த பிறகு மகள் தன் ஆயுள்வரை, சொத்துக்களை அனுபவிப்பாள். மகள் இறந்த பின் மகளுடைய சுவீகாரமகனே பூர்ண சுதந்தரமுள்ள வார்சாவான். இச் சந்தர்ப்பத்திலும் சகோதரி மகனுக்கு வார்சு பாத்தியம் கிட்டாது.

29. கேள்வி: (மந்திரம் பிள்ளை—கொற்கை) எல்லாச் சீட்டுகளுக்கும் பிரைஸ் கிடைக்கக் கூடியதாக நீர்ப்பாசன அபிவிருத்திக்குச் சீட்டுப் பிடிக்கலாமா? கவர்ன்மெண்டார் அனுமதி வேண்டுமா? யாருக்கு மனுச் செய்யவேண்டும்?

பதில்: இதற்கு ஆங்கிலத்தில் 'லாட்டரி' (Lottery) என்று பெயர். அதாவது சீட்டுக் குலுக்கி எடுத்து ஒருவருடைய அதிர்ஷ்டத்தைக் கண்டு பிடிப்பது. ராஜ்ய சர்க்காருடைய அனுமதி இல்லாமல் 'லாட்டரி' நடத்துவது, இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப்பற்றிய சட்டத்தின் செக்ஷன் 294A-ன்படி ஒரு குற்றமாகும். இக் குற்றத்திற்கு ஆறுமாதம் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம். டிக்கட்டுகளைக் குலுக்கிப்போட்டு யார் யாருடைய டிக்கெட் எடுக்கப்படுகிறதோ அவர்களுக்குப் பணமோ, வேறு சாமான்களோ, கொடுப்பதாகவோ, வேறு வித நன்மை செய்வதாகவோ, ஒரு திட்டத்தை யார் விளம்பரம் செய்தாலும், அதுவும் ஒரு குற்றமாகும். இதற்கு ரூபாய் ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

'லாட்டரி' அல்லது பிரைஸ் சீட்டு எடுப்பதின் நோக்கம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், பொது நன்மைக்காக இருந்தாலும், அதே சட்டம் தான்.

ஆனால் ராஜ்ய சர்க்காருக்கு மனுப்போட்டு அனுமதிபெற்றுக்கொண்டு 'லாட்டரி' நடத்துவது குற்றமாகாது.

30. கேள்வி: (மந்திரம் பிள்ளை—கொற்கை) இரண்டு போகம் விளையக்கூடிய நஞ்சை நிலத்திற்கு, பாசனத்திற்கு ஜலம் இருந்தும், நிர்வாக அதிகாரிகள் சப்ளை செய்யாமலிருந்து விட்டால், கவர்ன்மெண்டார்மீது மாசூல் நஷ்டத்திற்கு வழக்குத் தொடரச் சட்டமிருக்கிறதா? ஆதாரமென்ன?

பதில்: திறப்புக் கிராமங்களில் உள்ள நன்செய் நிலங்களின் பட்டாதார்களுக்கு (அதாவது, ரயத்துவாரிப் பட்டாதார்களுக்கு) நீர்ப் பாசனம் சம்பந்தமான ஒரு உரிமை உண்டு. அதாவது, தங்களுடைய நன்செய் நிலத்தில் சாகுபடி செய்வதற்குத் தேவையானதும் போதுமானதுமான தண்ணீரை, சர்க்கார் வாய்க்கால்களிலிருந்து (Government channels) வழக்கம் போல் அடைந்து வரும் உரிமை. ஒரு வாய்க்காலில் ஓடும் தண்ணீரைக் கொண்டு பல கிராமங்களிலுள்ள நன்செய் நிலங்கள் சாகுபடி ஆக வேண்டியதாக இருக்கும். அவர்களுக்குள் தண்ணீரை விநியோகம் செய்ய வேண்டிய பொறுப்பு சர்க்காருடையது. இதைச் சர்க்காரின் உரிமை என்றும் சொல்லலாம். அதாவது, ஒரு சர்க்கார் வாய்க்காலில் ஓடும் தண்ணீரைக் கொண்டு எந்த எந்தக் காலங்களில் எந்த எந்த நிலங்களுக்குத் தண்ணீர் சப்ளை செய்யப்படுமென்று உத்தரவிட, சர்க்காருக்கு ஓர் உரிமை உண்டு. இதை எந்த ரயத்துவாரிப் பட்டாதாரும் சாதாரணமாய் ஆட்சேபிக்க முடியாது. வழக்கமாக எந்த இடத்திலிருந்து ஒரு கிராமத்தின் பட்டாதார்கள் தங்கள் நன்செய் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறார்களோ, அதை விட்டு வேறு ஒரு இடத்திலிருந்து ஜலம் பாய்ச்சிக்கொள்ள வேண்டுமென்று சர்க்கார் சொல்லலாம். மாமூலாக, எந்த நேரங்களில் ஒரு கிராமத்தின் பட்டாதார்கள் தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டுவருகிறார்களோ, அவ்வாறு இல்லாமல் வேறு நேரங்களில்தான் ஜலம் பாய்ச்சிக்கொள்ள வேண்டுமென்றும் சர்க்கார் உத்தரவிடலாம். எப்பொழுதும் உள்ள வசதிக்குக் குறையாமல், ஒரு கிராமத்தில் உள்ள நன்செய் நிலக்காரர்கள் தங்கள் நன்செய் நிலங்களுக்குத் தேவையானதும் போதுமானதுமான ஜலத்தை வேறு முறையில் அடைந்து வரும் விதம், சர்க்கார் நீர்ப்பாசன முறையை மாற்றினாலும், அதையும் பட்டாதார்கள் ஆட்சேபிக்க முடியாது. ஒரு ஆயக்கட்டிலுள்ள எல்லாப் பட்டாதார்களுக்கும் அத் தண்ணீர் நியாயமான முறையில் பகிர்ந்து கொடுக்கப்படவேண்டும் என்பதற்காகச் சர்க்கார் இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். ஒரு வாய்க்காலில் மாமூலாக ஓடிக்கொண்டிருக்கும் தண்ணீர் எப்பொழுதும்போல் ஓடிக்கொண்டே இருக்கவேண்டுமென்றாவது, அதைக் கொண்டு வேறு புதிதாக ஒருவருக்கும் தண்ணீர் வசதிகள் ஏற்படுத்தக் கூடாதென்றாவது சொல்ல எந்த ரயத்துவாரிப் பட்டதாருக்கும் பாத்தியமில்லை. மேலும், எப்படியாவது ஒரு ரயத்துவாரிப் பட்டாதாருக்குப் போதுமான ஜலத்தைச் சப்ளைசெய்ய வேண்டுமென்ற கடமையும் சர்க்காருக்கு இல்லை. மழை இல்லாத காரணத்தினாலோ, வாய்க்கால் எந்த ஆற்றில் பிரிகின்றதோ அந்த ஆற்றிலேயே ஜலம் இல்லாத காரணத்தினாலோ ஒரு ரயத்துவாரிப் பட்டாதாருக்குத் தேவையான ஜல சப்ளை இல்லாவிட்டால் அதற்குச் சர்க்கார் பொறுப்பாளி அல்ல. ஆனால் அகப்படும் ஜலத்தை மேற்கண்டவாறு பகிர்ந்து கொடுக்கமட்டில் சர்க்காருக்கு ஒரு விசேஷ உரிமை உண்டு.

ஆகையால் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் ரயத்துவாரி நன்செய் நிலப் பட்டாதார்கள் சர்க்கார் மீது தாவா தொடரலாம்; நஷ்டம் கேட்கலாம். அதாவது, எப்பொழுதும்போல்

ஒரு பட்டாதார் தம் நன்செய் நிலங்களுக்குச் சாகுபடிக்காக உபயோகித்து வரும் ஜலத்தின் அளவைச் சர்க்கார் குறைத்து, அதனால் பட்டாதாருக்கு நஷ்டம் ஏற்படும் விதம் ஒரு வாய்க்காலின் ஜலத்தை வேறு இடத்திற்குச் சர்க்கார் திருப்பிவிட்டால், அது தவறு. நஷ்டம் அடைந்த அல்லது அடையக்கூடிய பட்டாதார்கள்தான் சர்க்கார்மீது நடவடிக்கை எடுக்க முடியும். அப்படி இல்லாவிட்டால் நீர்ப் பாசன வசதி சம்பந்தமாய் எந்தப் பட்டாதாரும் சர்க்கார்மீது யாதொருவித நடவடிக்கையும் எடுக்க முடியாது. இதுதான் நீர்ப்பாசன சம்பந்தமாய் 1872லிருந்து ஏற்பட்ட சென்னை ஹைகோர்ட்டாரின் பல தீர்ப்புகளின் கருத்து.

[ஆதாரம்:—1950 (2) மதராஸ் லா ஜர்னல்-658.)

31. கேள்வி: (L 3154) இந்து ஒருவனுக்கு ஒரு பெண் குழந்தையும் இரண்டு ஆண் குழந்தையும் உண்டு. அவனுடைய வீட்டை அவன் இறக்கும்போது, ஒரு ஆண் குழந்தையின் மேல் ரிஜிஸ்டர் செய்து, அவனுடைய மனைவியை கார்டியனாக வைத்துவிட்டான். இறந்தவனின் சகோதரனும் அவன் மனைவியும் அந்தக் கார்டியன் சரியல்ல அவள் வேறு ஒருவனுடன் கள்ள நட்புக் கொண்டிருக்கிறாள் என்று பிரச்சாரம் செய்து, அந்தக் கார்டியனுக்குப் பதில் தங்களைக் கார்டியனாக நியமிக்க வேண்டும் என்றால், சட்டம் இடம் தருமா?

பதில்: 1890ஆம் வருடத்திய "கார்டியன் அண்டு வார்ட்ஸ் ஆக்ட்" (The Guardian and Wards Act - 1890) என்ற சட்டப்படி ஒரு மைனருக்கு உயில் மூலம் நியமிக்கப்பட்டிருக்கும் கார்டியனை நீக்கவும், புதிதாக வேறு ஒருவரைக் கார்டியனாக நியமிக்கவும் கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் குறிப்பிட்ட மைனருடைய நன்மையை உத்தேசித்து யார் கார்டியனாக இருக்கத் தகுதி உள்ளவர் என்பது பல விஷயங்களை ஆலோசித்தே கோர்ட்டால் நிர்ணயம் செய்யப்படும்.

32. கேள்வி: (பெருமாள் உடையார் — புதுப்பட்டி) சுமார் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளாக ஓர் விவசாயி தனது சொந்த நிலத்திலுள்ள ஓர் கிணற்றை ஹரிஜனத் தொகுதியில் ஓர் வகுப்பாருக்குத் தருமமாகத் தண்ணீர் எடுத்துக் குடிக்க விடப்பட்டதைத் தடுக்க சட்டமுண்டா?

பதில்: தடுத்து விடலாம். இதைச் சட்ட பரிபாஷையில் 'அனுமதி' அல்லது 'லைசென்சு' Licence) என்று சொல்லுவது. பிறர் சொத்திலுள்ள உரிமைகளைக் குறித்த 'ஈஸ்மெண்ட்' சட்டத்தின் (Easements Act) செக்ஷன் 60 இன் படி இவ்வித அனுமதியைக் கிணற்றின் சொந்தக்காரர் எப்பொழுது வேண்டுமானாலும் ரத்துச் செய்து விடலாம். இதற்குக் காலாவதி ஒன்றுமில்லை.

33. கேள்வி: (சிதம்பரம் செட்டியார்) ஒரே நபருக்கு 5 கடைகளிருக்கின்றன. ஷை ஐந்து கடைகளுக்கும் 3 வருஷத்திற்கு வாடகைப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு வாடகைக்கு விட்டிருக்கிறார். ஷை 3 வருஷக் கெடு முடிய 3 மாதத்திற்கு முன் மூன்று கடைக்காரர்களுக்குத் தம் சொந்த உபயோகத்திற்குக் கடை தேவை என்று நோட்டீஸ் கொடுத்து அதன்பேரில் வாடகையை அதிகப்படுத்தி இருவரிடம் வாடகைப் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டிருக்கிறார். ஒருவர் கடையைக் காலி செய்துவிட்டார். ஷை கடை காலியாக இருக்கிறது. ஒருவரிடம் நோட்டீஸ் இல்லாமலே வாடகையை அதிகப்படுத்தி வாடகைப் பத்திரம் எழுதி வாங்கி இருக்கிறார். 5ஆவது கடை வாடகைதாரை, தம் சொந்த உபயோகத்துக்குக் கடை தேவை என்று சொல்லி காலி செய்யும்படி சொல்வதற்குச் சட்டம் இடம் தருமா?

பதில்: ஜாகை—வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் செக்ஷன் 7 (3) இன்படி சொந்த வியாபாரம் நடத்த, தன் சொந்தக் கட்டடம் எதையும் கேட்கலாம். ஆனால் இந்த ஷரத்துப்படி ஒரு கட்டடத்தை தம் வசப்படுத்திய பிறகு மறுபடியும் இன்னும் ஒரு கட்டடமும் தமக்கு வியாபாரத்திற்காகத் தேவையாக இருக்கிறதென்றுதான் கேட்க முடியாது. மேலும், இந்த ஷரத்துப்படி மனுப் போடுபவர் ஏற்கனவே தமக்குப் பாத்தியமுள்ள வேறு கட்டடத்தில் வியாபாரம் செய்து கொண்டிருப்பவராக இருக்கக்கூடாது.

34. கேள்வி: (தேவங்கர்—போடி) சென்னை அடகு பிடித்துக் கடன் கொடுப்போர் சட்டம் (Madras Pawn Brokers Act 1943) மதுரை ஜில்லாவுக்கு விஸ்தரிக்கப் பட்டிருக்கிறதா?

பதில்: இப்போது இச்சட்டம் மதுரை ஜில்லாவுக்கும் உண்டு. இச்சட்டம் 1943 இல் ஏற்பட்டது. தேவையான இடங்களுக்கு இச்சட்டத்தை அவ்வப்பொழுது அமுலுக்குக் கொண்டுவர, ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரத்தை அனுசரித்து 1-11-1944 முதல் இச்சட்டம் சென்னைக்கும் செங்கல்பட்டு ஜில்லாவுக்கும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. தென் கன்னடம் ஜில்லாவில் இது 27-2-1947 இல் அமுலுக்கு வந்தது. பிறகு 2-8-1947 தேதியுள்ள G. O. No. 3908 மூலம் இச்சட்டம் மலையாளம் ஜில்லா தவிர மற்ற எல்லாச் சென்னை ராஜ்ய ஜில்லாக்களுக்கும்

(மதுரை உள்பட) விஸ்தரிக்கப் பட்டுள்ளது. (5-8-1947 தேதி-சென்னைச்சர்க்கார் கெஜட் – பாகம் I–பார்க்கவும்.) மலையாளம் ஜில்லாவுக்கும் 4-11-1947 முதல் இச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆகையால் இப்போது இச்சட்டம் சென்னை ராஜ்யம் பூராவிலும் அமுலில் இருக்கிறது.

35. கேள்வி: (மெ-சொ-வ—திருச்சி) ஒரு கடையில் வேலைபார்க்கும் சிப்பந்தி ஒருவர் மாதக் கடைசி நாளில் சம்பளம் பெற்றுக் கொண்டு போனவர் மறுநாள் ராஜீனாமா லெட்டர் எழுதியனுப்பினால், கடை நடத்துபவர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதானா? அல்லது என்ன செய்யவேண்டும்?

பதில்: அதை ஏற்றுக் கொள்ளாமல் முதலாளி வேறு என்ன செய்ய முடியும்? சிப்பந்திகள் அவரவர் வேலை செய்து வரும் கடையைவிட்டு விடக்கூடாதென்றோ, தொடர்ந்து அதே கடையில்தான் வேலை செய்து வரவேண்டுமென்றோ அல்லது அவர் எப்பொழுதும் சிப்பந்தியாகவே தான் இருந்துவர வேண்டுமென்றோ, எவ்விதச் சட்டமும் இல்லை. ஆனால் சிப்பந்தியானவர் தாம் வேலையை விட்டுப்போவதாக இருந்தால், இத்தனை நாள் முன் நோட்டீசு கொடுத்து விலகிக் கொள்ள வேண்டுமென்று ஏதாவது ஒப்பந்தம் இருந்தால், அப்படிச்செய்யாமல் விலகிய சிப்பந்தி மீது நஷ்டம் கேட்க முதலாளிக்கு உரிமை உண்டு.

36. கேள்வி: (குருசாமி-சேலம்) இரு (இந்து) சகோதரர்களும் பாகப் பிரிவினை செய்து கொண்டு, தகப்பனருக்கு அன்ன வஸ்திரத்திற்காகக் கொஞ்சம் காடும் ஒரு வீடும் கொடுத்திருந்தார்கள். தகப்பனும் இளைய சகோதரரும் இறந்து விட்டார்கள். மூத்தசகோதரருக்கு ஆண் பெண் குழந்தைகள் உண்டு. இளையவருக்கு ஒரு பெண். அப்பெண்ணுக்கு ஆண் பெண் குழந்தைகள் உண்டு. ஷை சொத்தில் இளையவருடைய மகளுக்கு சட்டப்படி பங்கு உண்டா? பங்கு உண்டானால் ஷை சொத்தை அவள் விற்க அதிகாரம் உண்டா?

பதில்: "ஷை" சொத்தில் என்பது வியக்தமாக இல்லை. இளையவருடைய சொத்துக்கு அவருடைய மகளே தான் வார்சு. ஆனால் அவள் சாதாரணமாய் அதைத் தன் ஆயுள்வரை தான் அனுபவிக்கலாம். அவளுக்குப்பிறகு அச்சொத்து அவளுடைய ஆண் மக்களைச் சேரும். தகப்பனுக்கு அன்ன வஸ்திரத்திற்காகக் கொடுக்கப்பட்ட சொத்தின் தன்மை எப்படி என்று கேள்வியிலிருந்து விளங்கவில்லை. அவருக்கு ஒரு பாகமாகவே இச்சொத்து வைக்கப்பட்டிருந்தால்—அவர் இறக்கும்போது இரண்டு மகன்களும் உயிருடன் இருந்திருந்தால், அதை இரண்டு மகன்களும் ஆளுக்குப் பாதியாக அடைவார்கள். இளையவர் இறந்த பிறகு முன் சொன்னபடி இச்சொத்தை அவருடைய பெண்ணும், பிறகு பெண்ணின் ஆண் மக்களும் அடைவார்கள். ஆனால் தகப்பன் இறப்பதற்கு முன்பே, இளையமகன் இறந்துபோயிருந்தால், தகப்பனுடைய பாக சொத்தானது உயிருடனிருக்கும் மூத்தமகனுக்கு மட்டில் தான் போகும்.

37. கேள்வி: (குமாரசாமி—மேட்டுப்பாளையம்) ஒரு இந்து சொத்துக்கள் வாங்கும் பொழுது தம்முடைய மனைவியின் பெயருக்கே வாங்கி வைத்துவிட்டு இறந்துபோகிறார். மனைவிக்குப் பூர்வீகச்சொத்து ஒன்றும் கிடையாது. கல்யாணமான ஒரு ஆணும் ஒரு கல்யாணமாகாத ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். ஷை சொத்துக்கள் அந்த அம்மாளுக்குப் பின் யாருக்குச் சேரும்?

பதில்: இறந்த இந்துவானவர் இச்சொத்துக்களை 'பெயர் இரவலாக' மனைவி பெயருக்கு வாங்கி இருந்தால் உண்மையில் அச்சொத்து அவருடையதே. அவர் இறந்த உடனேயே அச் சொத்து மகனைச் சேரும். அப்படி இல்லாமல் உண்மையில் தம் மனைவிக்கென்றே இச்சொத்துக்களை அவர் வாங்கி இருந்தால் இவை மனைவியின் 'சீதன' சொத்தாகும். அப்படியானால் அவள் இறந்த பிறகு இச்சொத்துக்களுக்கு அவளுடைய பெண் மகள் தான் வார்சு.

38. கேள்வி: (கோபால கிருஷ்ணன்—திருநெல்வேலி) ஒரு விவாகமான ஹிந்து ஸ்திரீ தன் தகப்பனரின் நிர்ப்பந்தம் காரணமாகப் புருஷனுடைய வீட்டில் வசிக்க உடன்பட முடியாத நிலையிலிருந்தால், இப்போதுள்ள ஹிந்து விவாகச் சட்டப்படி கணவன் கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்து தன் மனைவியைத் தன்னுடைய வீட்டில் தன்னுடன் வாழும்படி கட்டாயப்படுத்தக் கணவனுக்கு சட்டரீதியான உரிமை உண்டா? எந்நிலையிலும் தன்னுடைய வீட்டில் தன்னுடன் தான் வாழவேண்டுமென்றும் நிர்ப்பந்திக்கக் கணவனுக்கு உரிமை உண்டா?

பதில்: மனைவி தம்முடன் வந்து வசிக்க வேண்டுமென்று கேட்டு, கோர்ட்டில் தாவா செய்ய கணவனுக்கு உரிமை உண்டு. அதாவது, "தாம்பத்திய உரிமையை" திரும்பப்பெற (Restitution of Conjugal rights) கணவன் சட்டப்படி கோர்ட்டில் மனைவிமீது வழக்குப் போடலாம். ஆனால் "எந்த நிலையிலும்" மனைவி தம்முடன் தான் வாழவேண்டுமென்று கட்டாயப்

படுத்தக் கணவனுக்கு உரிமை இல்லை. உதாரணமாகக் கணவன் எப்பொழுதும் மனைவியிடம் அபாய காமான குரூர நடத்தையுள்ளவனாக இருந்தால், அவ்விதக் கணவனுடன் மனைவி வசித்துவர வேண்டுமென்று சட்டம் கட்டாயப் படுத்தாது.

39. கேள்வி: (மாரி) இந்து ஒருவர் அவர் தாய் தகப்பன் விற்றுவிட்ட வீட்டை வாங்கிப் பன்னிரண்டு வருடமாய் ஆண்டு வந்தது மல்லாமல், அவர் இறக்கும்போது தம்முடைய ஆண்பிள்ளையின் பேரில் அவ்வீட்டை ரிஜிஸ்டர் செய்து விடுகிறார். இறந்தவருடைய சகோதரனுக்கு ஆண்பெண் மக்கள் இருக்கிறார்கள். இந்த வீடு பூர்வீகச் சொத்து என்று அவர்கள் வழக்காட உரிமை உண்டா?

பதில்: வீட்டை வாங்கியவர் குடும்பப் பொதுப் பணத்தைக் கொண்டு அவ்வீட்டை வாங்காமல் தம்முடைய பணத்தைக் கொண்டு வாங்கி இருந்தால், அவ்வீடு முன்பு ஒரு காலத்தில் குடும்பச் சொத்தாக இருந்தது என்ற காரணத்தினால் மறுபடியும் அது குடும்பச் சொத்தாகி விடாது. வீட்டை வாங்கியவருடைய சகோதரன் மக்களுக்கு அதில் எவ்வித உரிமையும் கிடையாது.

மிதாக்ஷரம், மயூகம் என்ற புராதனச் சட்ட நூற்களில் இது சம்பந்தமாக ஒரு விதி இருக்கிறது. அதாவது, குடும்பப் பூர்வீகமான சொத்தை அன்னியர்கள் துராகிருதமாக வைத்துக்கொண்டு அதைக் குடும்பத்தால் மீட்க முடியாத நிலைமையில் இருக்கும்போது, அக்குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டில் அச்சொத்தைக் குடும்ப உதவியில்லாமல் தனிப் பிரயாசையின் பேரில் மீட்டால் அச்சொத்தில் நான்கில் ஒரு பாகத்தை அவர் தனிமையில் அடைவாரென்றும், பாக்கியில் எப்பொழுதும் போல் அவருக்குப் பாகமும் உண்டென்றும் அந்நூல்களில் சில வாக்கியங்கள் இருக்கின்றன. ஆனால் தற்கால நீதி மன்றங்கள் இவ்விதியை அங்கீகரிக்கவில்லை. (55 லா வீக்லி—444)

40. கேள்வி: (முகமது உசேன்—நத்தம்) ஒரு ஹிந்து 1871ல் ஒரு சொத்து கிரயம் பெற்றிருக்கிறார். அந்தச் சொத்தின் 3ல் 1 பங்கு தான் கிரயதார் அனுபவித்து வருகிறார். மீதி 2 பங்கும் அடுத்த இடத்துக்காரர் வேறு ஒருவர். ஈடு, ஒத்தி, கிரயம், உயில் வேறு எந்த விதமான சம்பந்தமும் இல்லாமல் இது வரையிலும் அநுபவித்து வருகிறார். கிரயம் வாங்கியவருக்கு 1953ல் தான் தமது கிரயப்பத்திரத்தைப் பார்த்ததின் மூலம் தெரிகிறது. தற்பொழுது கிரயதார் வழக்கு தொடர்ந்தால் கிரயப்பத்திரப்படி உள்ள பூரா இடத்தையும் அடைய முடியுமா?

பதில்: முடியாது.

41. கேள்வி: (கண்ணய்யன்—தஞ்சை) ஒரு ஹிந்து தன் தமையன் பேரனைச் சிறு பிராயத்திலிருந்து வளர்த்து வந்து திருமணம்போல் பத்திரிகை அடித்து உறவினர்களுக்கெல்லாம் சொல்லி, சுவீகாரம் எடுத்துக்கொண்டார். அவருக்குச் சில சொத்துக்கள் உள்ளன. அவர் இப்பொழுது பையனை விரட்டிவிட்டு, ரிஜிஸ்தர் டாக்குமெண்டுமூலம் சுவிகாரம் இல்லை, சொத்துக்கள் நான் சம்பாதித்தவை; இஷ்டமிருந்தால் தான் கொடுக்கலாம், கொடுக்க இஷ்டமில்லை, என்கிறார். (ஆனால் ஒரு சுவீகாரப்பிள்ளை அவருக்கு இருப்பதாக உயில் எழுதி ரிஜிஸ்டர் செய்துள்ளார்.) பத்திரிக்கையும் இருக்கிறது. சட்டப்படி அவர்மேல் வழக்குத் தொடர முடியுமா?

பதில்: சுவீகாரம் செய்துகொள்ள 'ரிஜிஸ்டர் டாக்குமெண்டோ' சாதாரண பத்திரமோ அவசியமில்லை. ஆனால் சட்ட பூர்வமான சுவீகாரம் செய்துகொள்ள வேறு விதிகள் இருக்கின்றன. அவைகளின்படி சுவீகாரம் ஏற்பட்டாலும் போதும். சுவீகார மகனுக்குச் சொந்த மகனைப்போலத்தான் பாத்தியங்கள் உண்டு. அதாவது, சுவீகாரத் தகப்பனிடம் இருக்கும் சொத்து அவருடைய சுயசம்பாத்தியத் தனிச் சொத்தாக இருந்தால், சுவீகாரமகனுக்கு அவர் உள்ளவரையில் அதில் பாத்தியம் ஏற்படாது. இச்சொத்துக்களைத் தகப்பன் உயிருடனிருக்கும் போதே இஷ்டப்பட்டவர்களுக்குக் கொடுத்துவிடலாம்; உயில் மூலமும் கொடுத்துவிடலாம். ஆனால் தகப்பனிடம் இருப்பது பூர்வீகக் குடும்பச் சொத்தாக இருந்தால் சுவீகார மகனுக்குச் சுவீகாரம் ஏற்பட்ட உடனேயே சொத்தில் பாத்தியம் ஏற்பட்டு விடுகிறது. இஷ்டப்பட்டால் தம்முடைய பாகத்தைச் சுவீகார மகன் பிரித்துக்கொள்ளவும் முடியும்.

சட்டப்படி சுவீகாரம் ஏற்பட்டதா இல்லையா என்று கண்டுபிடிக்க சுவீகாரப்பத்திரிகையும், தகப்பன் செய்துவைத்த ரிஜிஸ்டர் உயிலும் ருசுக்களாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று மட்டில் பொதுவாகச் சொல்லலாம்.

42. கேள்வி: (சுப்பிரமணியன் — பூலம்பட்டி) ஒரு வியாபாரி தாம் ஒரு வியாபாரம் நடத்தி வருகிறார். அந்த வியாபாரம், விற்பனைவரி கட்டக்கூடிய அளவில் வியாபாரம் ஆவது கிடையாது. அவர் மற்றொரு வியாபாரி நடத்தும் வியாபாரத்துடனும் கூட்டாகச் சேர்ந்து நடத்துகிறார். கூட்டாகச்சேர்ந்த வியாபாரமும் விற்பனை வரி கட்

டக்கூடிய அளவில் வியாபாரம் கிடையாது. ஆனால் தம் சொந்த வியாபாரமும் கூட்டுச்சேர்ந்த மற்றொரு வியாபாரமும் சேர்ந்தால் மட்டும் வருடத்தில் ரூ. 7500-க்கும் அதிகமாக வியாபாரம் ஆகிறது. ஆகவே தம் சொந்த வியாபாரத்திற்கு இருக்கும் விலாசத்தையே கூட்டாகச் செய்யும் வியாபாரத்திற்கும் வைத்துச் செய்தால் இரண்டிற்கும் சேர்த்தே விற்பனைவரி விதிக்கலாமா? அல்லது ஒவ்வொரு கடைக்கும் ரூபாய் 7500 வருஷத்தில் வியாபாரம் ஆனால்தான் வரிவிதிக்க வேண்டுமா?

பதில்: இரண்டுக்கும் சேர்த்துத் தான் மொத்த வியாபாரம் கணக்குச் செய்யப்படும். ஒரு வருடத்தில் ரூ. 10,000-க்குக் குறையாமல் மொத்த வியாபாரம் செய்பவர்களுக்குத்தான் விற்பனை வரி உண்டு. ஆனால் ஒரு வருடத்தில் ரூ. 7500-க்குக் குறையாமல் மொத்த வியாபாரம் நடந்தால் அவ்வியாபாரி விற்பனைவரிச் சட்டத்தின் செக்ஷன் 8 A படி 'ரிஜிஸ்டர்' செய்து கொள்ளவேண்டும்.

43. கேள்வி: (கணேசன்—திருத்துறைபூண்டி) தஞ்சை சாகுபடிதார்-பண்ணையாள் பாதுகாப்புச் சட்டப்படி—வயதுமுதிர்ந்த சுமார் 50 வயதுக்கு மேற்பட்ட, திடகாத்திரமில்லாத ஒரு பண்ணையாளை பண்ணையைவிட்டு விலக்கலாமா?

பதில்: பண்ணையாளை எந்த எந்தக் காரணங்களைக் கொண்டுதான் விலக்கக்கூடுமென்று தஞ்சைச் சட்டத்தில் இல்லை. நியாயமான தகுந்த காரணங்கள் இல்லாமல் ஒரு பண்ணையாள் நீக்கப்பட்டால், அப்பண்ணையாளைத் திரும்ப வேலைக்கு அமர்த்திக் கொள்ள வேண்டுமென்று சமரச அதிகாரியோ ரிவின்யூ கோர்ட்டோ உத்தரவிடலாமென்று இருக்கிறது. ஒரு பண்ணையாளை நீக்கிய காரணம் நியாயமானதா போதுமானதா என்பதை அவ்வதிகாரிகள் தான் முடிவு செய்யவேண்டும். உதாரணமாக, எப்போதும் நோய்வாய்ப் பட்டு வேலை செய்யவே முடியாமல் இருக்கும் ஒரு பண்ணையாள் நீக்கப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படலாம். எத்தனை வயதுக்கு மேற்பட்ட பண்ணையாளை நீக்கலாமென்ற ஷரத்துக்களும் சட்டத்தில் இல்லை.

44. கேள்வி: (ராமய்யாபிள்ளை — மரக்கடை) இந்து ஸ்திரீகட்குப் பஞ்சாயத்து கோர்ட்டு டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் கோர்ட் முதலான சிவில்கோர்ட்களிலிருந்து சாக்ஷி சம்மன் வந்தால் ஷை ஸ்திரீகள் கட்டாயம் கோர்ட்டிற்குப் போகத்தான் வேண்டுமா? அல்லது போகாமலிருப்பதற்கு ஏதாவது சட்டமுண்டா?

பதில்: சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் (Civil Procedure Code) இது சம்பந்தமாக ஒரு ஷரத்து இருக்கிறது. இந்நாட்டின் பழக்க வழக்கங்களின்படி பகிரங்கமாக வெளியில் வரக்கூடாத ஸ்திரீகளைக் கோர்ட்டுகளில் நேரில் ஆஜராகவேண்டுமென்று உத்தரவிடக்கூடாது—என்று தான் செக்ஷன் 132 இல் இருக்கிறது. மேற்கண்டபடி பழக்க வழக்கங்களில்லாத இந்து ஸ்திரீகளுக்குச் சாட்சி சம்மன் வந்தால் அவர்கள் கோர்ட்டுக்குப் போய் ஆஜராகவேண்டியது தான்.

45. கேள்வி: (ராமய்யா—மரக்கடை) ஒரு வீட்டில் குடியிருப்பவர் சரிவர வாடகைக் கொடுக்காமல், நீண்ட காலமாய் பாக்கி வைத்துக்கொண்டே வந்தால், ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டப்படி வீட்டுக்காரர் கோர்ட்டில் மனுக்கொடுத்து வாடகைப் பாக்கியிருக்கிறதென்று கோர்ட்டாருக்குத் தெரிந்த பிறகும் குடியிருப்பவரை உடனே வீட்டைக் காலி செய்யும்படி ஆர்டர் போடாமல், மறுபடியும் டயம் கொடுக்கலாமா? ஷை வீட்டுக்காரருக்கு ஷை கோர்ட்டுச் செலவை கொடுக்கும்படி ஷை கோர்ட்டார் ஆர்டர் செய்யாவிட்டால், ஷை செலவை சிவில் கோர்ட்டில் தாவா செய்து வசூலிப்பதற்குச் சட்டமுண்டா?

பதில்: ஜாகை-வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தில் 1951 இல் ஏற்பட்ட திருத்தப்படி வாடகைப் பாக்கி இருப்பவர்கள் வேண்டுமென்று பாக்கி வைத்துக்கொள்ளவில்லை என்று தோன்றினால் அவர்களுக்கு 15 நாட்கள் அவகாசம் கொடுத்து அதற்குள் ஜாடா வாடகைப்பாக்கியையும் கட்டும்படி உத்தரவிட ரெண்ட் கண்ட்ரோல் அதிகாரிக்கு, செக்ஷன் 7-படி அதிகாரம் இருக்கிறது. அக்கெடுவுக்குள் பாக்கியைக் கட்டாவிட்டால்தான் குடியிருப்பவரை அகற்ற உத்தரவு ஏற்படும். செலவுத் தொகைக்குத் தனியாக, சிவில் கோர்ட்டில் தாவா செய்ய இடமில்லை.

46. கேள்வி: (ஷேக்—முத்துப்பேட்டை) விற்பனை வரி செலுத்தி வரும் மில் ஜவுளி சில்லறை வியாபாரி ஒவ்வொரு நிதி ஆண்டிலும், தாம் மில் ஜவுளியில் வியாபாரம் செய்வதற்கான லைசென்சைப் புதுப்பிக்கும்போது வருமானவரி இன்கம்டாக்ஸ் அதிகாரியிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி, ஜில்லா கலெக்டரிடம் சேர்ப்பிக்க வேண்டுமா?

பதில்: மில் ஜவுளி வியாபாரிகளும் சரி, மில் நூல் வியாபாரிகளும் சரி, ஜவுளி வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவுப்படிக்கும் நூல்வியாபாரிகள் கட்டுப்பாடு உத்தரவுப்படிக்கும், லைசென்சுக்கு மனுப்போடும்போதும், லைசென்சைப் புதுப்பிக்க மனுப்போடும்போதும் அவர்கள் மத்திய சர்க்காருக்கு வருமானவரி (இன்கம்டாக்ஸ்) கொடுக்க வேண்டியவர்களா, அவ்வரியைக் கொடுத்து விட்டார்களா, என்று வருமானவரி அதிகாரிகளிடமிருந்து அத்தாட்சி அல்லது 'சர்டிபிகேட்' வாங்

கித் தாகல் செய்ய வேண்டுமென்று, சென்னைச் சர்க்கார் ஒரு உத்தரவு செய்திருந்தனர். இது தான் 16-8-1949 தேதியுள்ள G. O. 867 ஆம் ரம்பர் சென்னைச் சர்க்கார் உத்தரவு. இது செல்லாதெனச் சமீபத்தில் சென்னை ஹைகோர்ட்டார் ஒரு வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர். அவ்வழக்கில், தலைச்சேரியில் ராமன் அண்டு கோ என்ற விலாசத்தில் மில் ஜவுளி வியாபாரம் செய்யும் ஜவுளி வியாபாரிக்கு 31-3-1950 முடிய லைசென்சு இருந்தது. அடுத்த நிதி வருடத்திற்கு லைசென்சைப் புதுப்பிக்க அவர் மலையாளம் ஜில்லா கலெக்டருக்கு மனுப்போட்டார். அவர் இன்கம் டாக்ஸ் கொடுத்து விட்ட சர்டிபிகேட் தாகல் செய்யவில்லை. அவ்வியாபாரி இன்கம்டாக்ஸ் பாக்கி ரூ. 37293-14-0 கொடுக்கவேண்டியிருக்கிறதென்ற காரணத்தினால் ஜில்லா கலெக்டர் அவருடைய ஜவுளி வியாபார லைசென்சைப் புதுப்பிக்க மறுத்து விட்டார். இவ்விதம் செய்யக் கலெக்டருக்கு அதிகாரமில்லை என்று அவ்வியாபாரி சென்னை ஹைகோர்ட்டில் ஒரு 'ரிட்' மனுக் கொடுத்தார். இம்மனுவை விசாரித்த உயர் நீதிபதி சுப்பாராவ் அவர்கள், கலெக்டருடைய உத்தரவு செல்லாதென அதை ரத்துச் செய்தனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தியப் பிரஜையாகிய அவ்வியாபாரிக்கு ஜவுளிவியாபாரம் செய்ய ஒரு ஜீவாதார உரிமை (Fundamenta Right) இருக்கிறதென்றும்; அவ்வுரிமையைச் செலுத்துவதில் பொதுமக்களின் சார்பாக நியாயமான நிபந்தனைகளை ஏற்படுத்த மட்டில் தான் அரசாங்கத்திற்கு இந்திய அரசியல் அமைப்பில் அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறதென்றும்; ஜவுளி வியாபரத்திற்குச் சம்பந்தமில்லாத வருமான வரி செலுத்துவது பற்றிய ஒரு நிபந்தனையானது நியயமனதல்ல பொது மக்கள் சார்பானதுமல்ல என்றும்; ஆகையால் அந்நிபந்தனையை விதிக்கும் அரசாங்க உத்தரவும் அதை அநுசரித்து ஜில்லா கலெக்டர் செய்த உத்தரவும் செல்லமாட்டாவென நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். (1953—ஆல் இந்திய ரிபோர்ட்டர்—மதராஸ் 84.)

இத்தீர்ப்புக்குப் பிறகு ஜில்லா கலெக்டர்கள் வருமானவரி சர்டிபிகேட் கேட்கமாட்டார்கள்.

47. கேள்வி: (L. 2889-ரெங்கசாமி உடையார்) ஒரு இந்துவுக்கு இரண்டுதாரம் மனைவிகள். இருவருக்கும் குழந்தைகள் இல்லை; டி இந்துவுக்குத் தாயும், ஆண் குழந்தையுடன் கூடிய ஒரு சகோதரியும் இருக்கிறார்கள். முதல் மனைவி இறந்த பிறகு, அவர் தம்முடைய சொத்துக்களை விற்க எடுக்கபாத்தியத்துடன் தம் இரண்டாம் மனைவி பெயருக்கே ஒரு உயில் எழுதிவைத்துவிட்டு இறந்துவிட்டார். பிறகு அம்மனைவியும் இறந்துவிட்டாள். டி சொத்துக்கள் பாகஸ்தர்களுக்கு உண்டா, அல்லது மேற்சொல்லிய தாயார், சகோதரி, சகோதரி மகன் இவர்களுக்குப் பாத்தியமா?

பதில்: டி சொத்துக்கள் இறந்த இரண்டாம் மனைவியின் ஸ்ரீதன சொத்துக்களாகும். அச்சொத்துக்களை அவருடைய கணவனுடைய தாயாரே தான் முதலில் வார்சு முறைமையில் அடைவாள். அவள் அதைத்தம் ஆயுள்வரைத் தான் அனுபவிக்க பாத்திய முடையவள். அவளுக்குப் பின் அச்சொத்துக்கள் கணவனுடைய தாயாதிகளுக்குப் (பங்காளிகளுக்குப்) போகும். சகோதரிக்கோ சகோதரி மகனுக்கோ போகாது.

1929-ம் வருடத்திய 2-வது மத்திய சட்டத்தால் இறந்த இந்து ஒருவரின் சகோதரிக்கும் சகோதரி மகனுக்கும் புதிதாக நெருங்கிய வார்சு பாத்தியம் அளிக்கப்பட்டது. அதாவது, வார்சுக்கிரமத்தில் இவர்கள், தாயாதிகள் அல்லது பங்காளிகளுக்கு முன்பே இடம் கொடுக்கப் பட்டனர். ஆனால் இச்சட்டமானது இறந்த ஆண் ஒருவருடைய சொத்துக்களுக்குத் தான் பொருந்து மென்றும்; ஒரு ஸ்திரீயின் சொத்துக்களுக்கு இச்சட்டம் பொருந்தாதென்றும் சமீபத்தில் நமது சுப்ரீம் கோர்ட்டார் ஒரு தீர்ப்பு அளித்திருக்கின்றனர். (65-லா வீக்லி-359)

48. கேள்வி: (L. 2751-முத்துகிருஷ்ணன்) ஒருவருக்கு (இந்து) இரு மனைவிகளும் பூர்வீகச் சொத்தும் உண்டு. மூத்த மனைவிக்கு மூன்று பெண்கள். ஆண் வார்சு இல்லை. இளைய மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்து ஒரு நாள் கழித்து இறந்து விட்டது. கணவன் சில நாட்களில் இறந்து விட்டார். இரு மனைவிகளுக்கும் உள்ள பாத்தியம் என்ன? இளைய மனைவி டி சொத்தை விற்கமுடியுமா?

பதில்: இரு மனைவிகளும் இறந்த கணவருடைய எல்லாச் சொத்துக்களையும் வார்சு முறைமையில் சம்பாத்தியமாக அடைவார்கள். இருவரில் ஒருவர் இறந்த பிறகு எல்லா சொத்துக்களையும் மற்ற மனைவியே அடைவாள். இவர்கள் சாதாரணமாகத் தங்கள் ஆயுள் வரை தான் இச்சொத்துக்களை அனுபவித்து வாலாமே ஒழிய, விற்க முடியாது. இரு மனைவிகளும் இறந்த பிறகு, பெண்கள் தான் வார்சுகளாவார்கள், இளைய மனைவிக்குப் பிறந்த குழந்தையானது தகப்பனுக்கு முன்பே இறந்து விட்ட படியால், அவளுக்கு ஒன்றும் விசேஷ பாத்தியங்கள் இல்லை. தகப்பனுக்குப் பின் அக் குழந்தை இறந்திருந்தால், வார்சு பாத்தியம் வேறு விதமாக இருந்திருக்கும்.



சென்னை கிராமப் பஞ்சாயத்து சட்டம் – 1950

[The Madras Village Panchayats Act—1950. 1950-ஆம் வருடத்திய 10-ஆவது சென்னைச் சட்டம். சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. 15—7—50-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது. 1—8—1950 தேதியுள்ள சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டது. 1—4—1951 முதல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்துச் சட்டம், அது சம்பந்தமான விதிகள், சர்க்கார் அறிக்கைகள் முதலியவைகள் எல்லாவற்றையும் சேர்த்து 1952 பிப்ரவரி மாத "வக்கீல்" இதழ் முதல் தொடர்ச்சியாகவும் விவரமாகவும் விளக்கம் செய்யப்பட்டு வருகிறது.]

சென்ற மாத இதழில், இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துக்களுக்கு மட்டில் சர்க்காரால் 'கிராண்டு' கொடுக்கப்படும் என்பதையும், பஞ்சாயத்து நிதித் தொகைகளை எந்த எந்தக் காரியங்களுக்காகச் செலவு செய்யலாம் என்பதையும், கவனித்தோம். மேலும், ஒரு பஞ்சாயத்தானது விதிக்கக்கூடிய வீட்டு வரி பற்றிய விதிகளும் விளக்கப்பட்டன. இந்த இதழில் பஞ்சாயத்துகள் ஒவ்வொரு வருடமும் தயார் செய்ய வேண்டிய 'பட்ஜெட்' என்ற வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிப் பஞ்சாயத்துச் சட்டத்திலிருக்கும் ஷரத்துக்களையும் இது சம்பந்தமாகச் சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளையும் கவனிப்போம்.

'பட்ஜெட்' தயாரிப்பதும் அதைப் பஞ்சாயத்து அங்கீகரிப்பதும்

(1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியானவர் ஒவ்வொரு வருடமும் பிந்திய வருடத்தில் அப்பஞ்சாயத்துக்குக் செக்ஷன் 73 கிடைக்கக் கூடிய வரவு இனங்கள் எவை என்றும், செலவு இனங்கள் எவை என்றும், கண்டு பட்ஜெட்' என்று சொல்லப்படும் ஒரு உத்தேச வரவு செலவுத் திட்டத்தைத் தயார் செய்ய வேண்டும். ('வருடம்' என்பது ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆரம்பமாகும் நிதி வருடத்தைக் குறிப்பிடும்.) இத்திட்டத்தை அவர் பஞ்சாயத்துக்கு முன் வைக்க வேண்டும்.

'பட்ஜெட்டில்' ஏதாவது மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று பஞ்சாயத்துக்குத் தோன்றினால் அம் மாறுதல்களைச் செய்து, 'பட்ஜெட்' திட்டத்தைப் பஞ்சாயத்தானது அங்கீகாரம் செய்ய வேண்டும்.

(2) 'பட்ஜெட்'டைப் பஞ்சாயத்தானது அங்கீகாரம் செய்தவுடன் அது குறிப்பிட்ட தேதிக்குள், விதிகளில் கண்டிருக்கும் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். எந்த அதிகாரிக்கு 'பட்ஜட்' அனுப்பப் படவேண்டும், எந்தத் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமென்று விதிகளில் குறிப்பிடப்படும். பஞ்சாயத்தானது கட்டாயமாகச் செய்ய வேண்டிய காரியங்களுக்கு, 'பட்ஜெட்'டில் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட வில்லை என்று அவ்வதிகாரிக்குத் தோன்றினால், அவர் அதற்காகப் பட்ஜெட்டை மாற்றி அமைக்கலாம்.

(3) எந்த வருடத்திலாவது 'பட்ஜெட்'டில் கண்டிருக்கும் வரவு இனங்களைப்பற்றிய தொகைகளையோ, செலவு இனங்களைப் பற்றிய தொகைகளையோ திருத்திக் கொள்ளுவது அவசியமென்று பஞ்சாயத்துக்குத் தோன்றினால், மேலே (1) (2) உட்பிரிவுகளில் கண்ட விதம் ஒரு திருத்தப் பட்ஜெட் தயார் செய்து அதைப் பஞ்சாயத்து அங்கீகாரம் செய்து, குறிப்பிட்ட அதிகாரிக்கு அனுப்ப வேண்டும். ஆனால் அவ்வதிகாரியின் சம்மதமின்றி, திருத்தங்களில் கண்ட

மாறுதல்களைப் பஞ்சாயத்தானது அமுலுக்குக் கொண்டுவரக் கூடாது.

'பட்ஜெட்' பற்றிய விதிகள்

(1) பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி தான் ஒவ்வொரு வருடமும் 'பட்ஜெட்' தயார் செய்ய வேண்டும். அடுத்த வருடத்தில் பஞ்சாயத்துக்கு வரக்கூடிய உத்தேச வரவு இனங்களையும் உத்தேச செலவு இனங்களையும் அதில் காண்பிக்க வேண்டும். (2) வரவுத் தொகைகளில், செலவுகள் போக, குறைந்தது 5 சத விகிதமாவது பாக்கி இருக்கும்படி 'பட்ஜெட்'டைத் தயார் செய்ய வேண்டும். அதாவது, வரவு இனங்களில் தர்ம சொத்துக்கள் சர்க்கார் கிராண்டு, கடன் பாபத்துக்கள் இவைகளை நீக்கி, பாக்கித் தொகையில் 5 சத விகிதம் பாக்கி இருக்கும்படி இதைத் தயார் செய்ய வேண்டும். (3) பட்ஜெட்டும் அதன் சுருக்கமும் அவ்வப்பொழுது சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும் நமூனுக்களின்படி இருக்கவேண்டும். (4) பட்ஜெட்டைப் பஞ்சாயத்தானது அங்கீகாரம் செய்வதற்காகக் குறிப்பிடப்படும் தேதிக்கு முன்பு, அதைப் பஞ்சாயத்து அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து பார்ப்பதற்காக அவர்களுக்குப் போதுமான அவகாசம் இருக்கும்படி பட்ஜெட்டின் நகல்கள் அந்தக் கிராமபாஷையில் பஞ்சாயத்து அங்கத்தினர்களுக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு பட்ஜெட் கமிட்டி என்று ஒன்று இருந்தால் அக்கமிட்டியானது பட்ஜெட்டைப் பரிசீலனை செய்ய வேண்டும். இதற்கும் பிறகு தான் பஞ்சாயத்துத்தலைவர் 'பட்ஜெட்' திட்டத்தைப் பஞ்சாயத்தின் முன்பு வைக்க வேண்டும். (5) பஞ்சாயத்தானது, பட்ஜெட்டை அங்கீகாரம் செய்வதற்கு முன்பு கீழே கண்ட விஷயங்களைக் கவனிக்க வேண்டும்:—

21-8-1951 தேதி சென்னைச் சர்க்கார் கெஜட்-ஆல் சப்ளிமெண்ட்-பாகம் IA-பக்கம் 170

(i) உத்தேச வரவு இனங்கள் முழுமையாகவும் ஜாக்கிரதையாகவும் போடப்பட்டிருக்கிறதா. (ii) பஞ்சாயத்தானது கட்டாயமாகச் செய்ய வேண்டிய காரியங்களுக்குப் போதுமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா. (iii) பஞ்சாயத்துக் கொடுக்க வேண்டிய கடன்களுக்கும் வேறு தொகைகளுக்கும் சரிவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா. (iv) முந்திய வருடத்திய வரவு செலவு கணக்கும் பட்ஜெட்டுக்கும் வித்தியாசமாக இருக்கும் இனங்களைப் பற்றிய சமாதானங்கள் சரியாக இருக்கின்றனவா. (v) செலவு போக பாக்கி இருக்க வேண்டுமென்று கண்டிருக்கிற தொகை மேலே 2ஆவது விதியில் கண்டபடி இருக்கிறதா—என்ற விஷயங்களைப் பற்றிக் கவனித்துப் பார்த்த பிறகே தான் பஞ்சாயத்தானது பட்ஜெட்டை அங்கீகாரம் செய்ய வேண்டும். (6) பட்ஜெட்டைப் பஞ்சாயத்து அங்கீகாரம் செய்த பிறகு நிர்வாக அதிகாரியானவர் பட்ஜெட்டுக்கு மூன்று பிரதிகள் எடுத்து முதல் வகுப்புப் பஞ்சாயத்தாக இருந்தால் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் மூலமாகப் பிரதேச இன்ஸ்பெக்டருக்கும்; இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்தாக இருந்தால் டிப்டி பஞ்சாயத்து ஆபீசர் மூலமாக ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கும், பட்ஜெட் வருடத்திற்கு முன்பு வரும் நவம்பர் மாதம் 30-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். அதே சமயத்தில் ஆடிட்டருக்கும் ஒரு பிரதி அனுப்ப வேண்டும். ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் ஒரு பிரதியைத் தம் வசம் வைத்துக் கொண்டு பாக்கி இரண்டு பிரதிகளைப் பிரதேச இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும். அதைப் போலவே டிப்டி பஞ்சாயத்து ஆபீசர் தம் வசம் ஒரு பிரதியை வைத்துக் கொண்டு பாக்கி இரண்டு பிரதிகளையும் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கு அனுப்புவார். முதல் வகுப்புப் பஞ்சாயத்து பட்ஜெட்டுகளைப் பிரதேச இன்ஸ்பெக்டர், செக்ஷன் 73 (2) இல் கண்டபடி பட்ஜெட்டை மாற்றியோ, மாற்றாமல் அப்படியேயோ, அங்கீகரரம் செய்து, தம் உத்தரவைப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கும், ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கும், ஆடிட்டருக்கும் அனுப்புவார். அதைப் போலவே இரண்டாம் வகுப்புப் பஞ்சாயத்துப் பட்ஜெட்டுகளை, ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் மாற்றியோ, மாற்றாமலோ, அங்கீகாரம் செய்து, தம் உத்தரவைப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிக்கும், டிப்டி பஞ்சாயத்து ஆபீசருக்கும், ஆடிட்டருக்கும் அனுப்புவார். இவ்வுத்தரவுகளைப் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியான

வர், பஞ்சாயத்தின் முன் வைத்து உத்தரவு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டும். (7) பட்ஜெட்டில் காணப்படாத எந்தச் செலவையும் சரி; பட்ஜெட்டில் கண்ட தொகைகளை விட அதிகமான செலவுகளையும் சரி, செலவு செய்ய எந்தப் பஞ்சாயத்தும் அனுமதி கொடுக்கக் கூடாது; ஆனல் அதிகச் செலவுகளுக்கான வருமான இனங்கள் எவை என்று சுட்டிக் காட்டி, மேற்கண்ட விஷயங்களில் அதிகச் செலவை அனுமதிக்கப் பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு. (8) பட்ஜெட்டானது அங்கீகாரம் செய்யப்பட்டுவிட்டது என்ற காரணத்தினல் பட்டில், அதில் கண்ட செலவுகளைச் செய்ய பஞ்சாயத்துக்கு அதிகாரம் இருப்பதாக ஏற்படாது. ஒரு செலவைச் செய்யச் சர்க்கார் அனுமதியோ, வேறு அதிகாரியின் அனுமதியோ வேண்டுமென்று இருந்தால், அதற்கு அவ்வித அனுமதியைப் பெற்ற பிறகேதான் அச்செலவுகளைப் பஞ்சாயத்து செய்யக்கூடும். (9) செலவுகளைப் பற்றி ஆடிட்டர் சொல்லும் விஷயங்களைப் பஞ்சாயத்து நிர்வாக ஆதிகாரியானவர் உடனுக்குடன் கவனிக்க வேண்டும். (10) ஒரு வருடத்தில் ஒரு குறிப்பிட்ட செலவுக்காக ஒதுக்கப்படும் தொகைகள் அந்த வருடத்திற்குள் குறிப்பிட்ட விஷயத்திற்காகச் செலவு செய்யப்படா விட்டால், அத்துடன் அச்செலவை நிறுத்திக்கொள்ள வேண்டும். அத்தொகை 'லாப்ஸ்' ஆகிவிடும். அவ்வருடம் முடிந்த பிறகு அத்தொகையையோ பாக்கி இருக்கும் தொகையையோ செலவு செய்யக் கூடாது. மேலும், அவ்வருடத்திற்குள்ளேயே ஒரு விஷயத்திற்காக பட்ஜெட்டில் ஒதுக்கி வைக்கப்பட்ட தொகையை வேறு விஷயத்திற்குச் செலவு செய்வதும், முன் கூட்டியே வாங்கி வைத்துக் கொள்ளுவதும் கூடாது. (11) ஒரு வருடத்தில் பஞ்சாயத்தானது செய்யக் கூடிய செலவுகள் எல்லாம் பட்ஜெட் திட்டத்தில் கண்டிருப்பதையும், பிரதேச இன்ஸ்பெக்டர் அல்லது ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் அதில் செய்த மாறுதல்களையும் அனுசரித்தே செய்யப்படவேண்டும். (12) புதிதாக ஏதாவது செலவுகள் செய்ய வேண்டியிருந்தாலும் சரி, ஏற்கனவே பட்ஜெட்டில் கண்டிருக்கும் இனங்களுக்காக அதிகச் செலவுகள் செய்ய வேண்டியிருந்தாலும் சரி, வேறு இனங்களிலிருந்து அத்தொகைகளைச் செலவு செய்வதற்குப் பிரதேச இன்ஸ்பெக்டர் அல்லது ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருடைய அனுமதி வேண்டும். இவ்வித அனுமதி கிடைக்க நமூனு A-ன்படி அவ்வதிகாரிகளுக்கு பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரியால் மனுப் போடப்பட வேண்டும். மேற்கண்ட அனுமதி உத்தரவானது அவ்வருட முடிவிற்குள் கிடைக்கும்படி அவகாசம் வைத்து பஞ்சாயத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பிறகேதான் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியானவர் மேற்கண்ட மனுவைத் தாகல் செய்ய வேண்டும். ஆனல் ரூ. 100க்கு மேற்படாத செலவை ஒரு இனத்திலிருந்து வேறு இனத்திற்கு மாற்றப் பஞ்சாயத்தின் அனுமதியே போதுமானது. விசேஷகாரணங்கள் இருந்து நிர்வாக அதிகாரியும் திருப்திகரமான சமாதானம் சொல்லுவதன் பேரில், அவ்வருடம் முடிந்த பிறகும் ஒரு இனத்திலிருந்து வேறு இனத்திற்குச் செலவை மாற்றியதை மேற்கண்ட அதிகாரிகள் அங்கீகாரம் செய்யலாம். மேற்கண்டபடி பிரதேச இன்ஸ்பெக்டர் அல்லது ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருடைய அனுமதி உத்தரவு கிடைத்ததும், ஒரு வாரத்திற்குள் அதன் நகல் ஒன்றைப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியானவர் ஆடிட்டருக்கு அனுப்ப வேண்டும். (13) பட்ஜெட்டில் மீதி இருக்கும் தொகைகளிலிருந்து புதிய செலவுகளோ, அதிகச் செலவுகளோ செய்ய வேண்டியிருந்தாலும், அதற்கும் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரியானவர் பஞ்சாயத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொண்டு நமூனு B-இன் படி பிரதேச இன்ஸ்பெக்டருக்கோ, ஜில்லா பஞ்சாயத்து ஆபீசருக்கோ மனுப்போட வேண்டும். இச்செலவும் போக விதி 2 இல் கண்டபடி பட்ஜெட்டில் பாக்கிப் பணம் இருக்க வேண்டும். இதற்கும் அதிகாரிகளுடைய அனுமதி கிடைத்த ஒரு வாரத்திற்குள் அதன் நகல் ஒன்று ஆடிட்டருக்கு அனுப்பப்பட வேண்டும்.

(தொடரும்)

உங்கள் தீர்ப்பு என்ன?

செப்டம்பர் மாதம் 29 ஆம் தேதி இரவு கந்தனுடைய மூன்று எருமைமாடுகள் காணாமற் போயின. கெட்டுப்போன விஷயம் தெரிந்தவுடன் அன்றிரவே மாடுகளைத் தேடினர். அகப்படவில்லை. ஆனால் உடனே இவ்விஷயத்தைக் கந்தன் போலீசாரிடம் எழுதி வைக்கவில்லை. அக்டோபர் மாதம் 11ஆம் தேதி தான் இவ்விஷயம் போலீசாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

மறு நாள் இம் மாடுகளில் ஒன்று சுப்பய்யாவின் மாட்டுக் கொட்டிலில் கட்டி இருப்பதாக யாரோ ஒருவர் போலீசாரிடம் தெரிவித்ததன் பேரில், போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் அங்கே போய் அம்மாட்டை கைப் பற்றினார். போலீசார் புலன் விசாரித்துச் சுப்பய்யா மீது கிரிமினல் வழக்குத் தொடர்ந்தனர். சுப்பய்யா ஒன்று அம்மாட்டை திருடியிருக்க வேண்டும்; அல்லது அது திருட்டு மாடு என்று தெரிந்தே அதை அவர் வாங்கியிருக்க வேண்டும்—என்பது தான் அவர் மீது குற்றச்சாட்டு. இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைப் பற்றிய சட்டப்படி திருடுவதும் குற்றம் தான்; திருட்டுச் சொத்து என்று தெரிந்தே அதை வாங்குவதும் குற்றம் தான்.

"அம்மாட்டுக் கொட்டிலிலிருந்து போலீசார் இம்மாட்டைக் கைப்பற்றி இருப்பது உண்மை தான். ஆனால் அம்மாட்டை அங்கே கட்டியது நான் அல்ல. வேறு யாரோ அதை அங்கே கட்டியிருக்க வேண்டும்; எனக்கு அவ்விஷயம் ஒன்றும் தெரியாது." என்று சுப்பய்யா சமாதானம் சொன்னார்.

வழக்கின் விசாரணையில் ருசுவான விஷயங்களாவன:—சுப்பய்யாவின் வீட்டிலிருந்து அம்மாட்டுக் கொட்டில் சுமார் இரண்டு பர்லாங் தூரத்தில் இருக்கிறது. அக்கொட்டிலை சுப்பய்யாவோ வேறு எவரோ உபயோகிக்கவில்லை. அக்கொட்டில் எப்போதும் திறந்தபடியே கிடந்தது. இல்லா விட்டால் வழியோடு போகிறவர் அம்மாடு உள்ளே இருப்பதைப் பார்க்க முடியுமா? சப்இன்ஸ்பெக்டரும் தாராளமாக உள்ளே போய் அம்மாட்டைக் கைப்பற்றி இருக்கிறார். அக்கொட்டிலுக்குப் பக்கத்தில் போக்கிரி ஒருவர் வசித்தும் வந்தார். அவருக்கும் ஒரு மாட்டுக் கொட்டில் உண்டு. இவைதான் இவ்வழக்கில் ருசுவான விஷயம். சுப்பைய்யா மாட்டைத் திருடியதாகவோ, திருட்டு மாட்டை வாக்கியதாகவோ நேரடியாக யாதொரு ருசுவும் இல்லை.

ஆனால் இது சம்பந்தமான சட்ட ஷரத்துக்கள் என்ன என்பதையும் கவனித்துக் கொள்ளுங்கள். ஒரு விஷயத்தை எப்படிக்

கோர்ட்டுகளில் ருசுச் செய்வது என்பதைப் பற்றிய நுட்பமான விதிகள் அடங்கிய ருசுச் சட்டத்தின் (Evidence Act) செக்ஷன் 114-என்பது பின் வருமாறு:—

"ஒரு குறிப்பிட்ட வழக்கின் விஷயங்களைப் பற்றிய வரையில், சாதாரணமாக நடக்கக் கூடிய இயற்கைச் சம்பவங்களையும் சரி; பொது விஷயங்களிலும், சொந்த விஷயங்களிலும் மனித நடத்தை எவ்விதம் இருக்கிறது என்பதையும் சரி மனதில் வைத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட சம்பவம் அநேகமாக நடந்திருக்கக் கூடுமென்று நீதிபதிக்குத் தோன்றினால், அச்சம்பவம் நடந்திருப்பதாகவே அவர் பாவிக்கலாம்.

உதாரணம் (a):— ஒரு திருட்டு நடந்தவுடன், யாருடைய வசத்தில் அத் திருட்டுச் சொத்தானது இருக்கிறதோ அவர் அது தம்மிடம் எப்படி வந்ததென்று சமாதானம் சொல்லாவிட்டால், ஒன்று அவர் அதைத் திருடி இருக்க வேண்டும்; அல்லது அது திருட்டுச் சொத்து என்று தெரிந்தே அவர் அதை வாங்கியிருக்க வேண்டும் என்று ஊகிக்க நீதிபதிக்கு உரிமை உண்டு."—இது தான் சட்ட ஷரத்து.

நீங்கள் நீதிபதியாக இருந்து இவ் வழக்கை விசாரித்தால், சுப்பய்யாவைக் குற்றவாளி என்று சொல்லுவீர்களா? அல்லது அவர்மீது எக்குற்றமும் ருசு ஆகவில்லை என்று சொல்லுவீர்களா? உங்கள் தீர்ப்பு என்ன?

187720

இது போன்ற வழக்கை முதலில் விசாரித்த முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டானவர் சுப்பய்யா திருடியதாக ருசுவாகவில்லை என்றும்; ஆனால் மேற்கண்ட சட்ட உதாரணத்தை ஆதாரமாகக்கொண்டு அவர் தெரிந்தே திருட்டுச்சொத்தை வாங்கிய குற்றம் செய்தாரென்றும் அபிப்பிராயப்பட்டு, சுப்பய்யாவுக்கு அவர் மூன்று மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனையும் நூறு ரூபாய் அபராதமும் விதித்தார் இத்தீர்ப்பை, செஷன்ஸ் ஜட்ஜ் உறுதி செய்தார். ஆனால் ஹைகோர்ட்டார் சுப்பய்யா மீது எந்தக் குற்றமும் ருசு ஆகவில்லை என்று அபிப்பிராயப்பட்டு, சுப்பய்யா அடைந்த தண்டனையை ரத்துச் செய்தனர். சுப்பய்யா திருடியதாகவோ, திருட்டுச் சொத்தை வாங்கியதாகவோ ருசு ஒன்றுமில்லை. ருசுச் சட்டத்தின் செக்ஷன் 114 உதாரணம் (a) ல் கண்டபடி இவ்வழக்கில் ஊகிக்கவும் சட்டம் இடங் கொடுக்காது. ஏனென்றால், திருட்டுப் போன சொத்து யாரிடம் காணப்படுகிறதோ அவர் அது தம்மிடம் எப்படி வந்ததென்று யாதொரு சமாதானமும் சொல்லாமல் இருந்தால் தான், அவர் ஒன்று திருடியிருக்க வேண்டும், அல்லது திருட்டுச் சொத்து என்று தெரிந்தே அதை வாங்கி இருக்க வேண்டுமென்று நீதிபதியானவர் ஊகிக்கலாம். அவர் சமாதானம் ஒன்று சொல்லி விட்டால், மேற்கண்டபடி நீதிபதி ஊகிக்கச் சட்டத்தில் இடமில்லை என்று ஹைகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டனர். இவ்வழக்கில் உபயோகிக்காமலிருந்த மாட்டுக் கொட்டில் சுப்பய்யாவுடைய சுவாதீனத்திலிருந்ததாக வைத்துக் கொண்டாலும், அம்மாட்டை வேறு ஒருவர் வேண்டுமென்று இக்கொட்டிலில் சுப்பய்யாவுக்குத் தெரியாமலே கட்டியிருக்கலாம் என்பதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமாதானம் தானே. சுப்பய்யாவைக் குற்றவாளி என்று ஊகிக்கச் சட்டம் இடம் கொடுக்கா விட்டால், அவர் குற்றம் செய்ததாக வேறு ருசு ஒன்றும் இல்லை என்று நீதிபதி அபிப்பிராயப்பட்டனர்.

(1953-ஆல் இந்தியா ரிபோர்ட்டர்—அலகாபாத்—136-ல் இருக்கும் வழக்கைத் தழுவி எழுதப்பட்டது. அவ்வழக்கில் இருக்கும் பெயர்களுக்குப் பதிலாக வேறு பெயர்கள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன.)

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMUDAR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B. L.

ஜரிகை நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
—கிடைக்குமிடம்—

ராணி
ரெங்கய்யர்
சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு :—
20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,
மதுரை.

*

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்
பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக
ஸ்டாக் செய்திருக்கிறோம்.

ரெங்கமூர்த்தி
கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள் :—
காரைக்குடி, சாட்டரசன்கோட்டை.

ஸ்டார் புகையிலை கம்பெனி
மார்க்
ஸ்டார் புகையிலை
TRADE MARK
சிவபுரி
புதுக்கோட்டை

சுவைப்பதற்கு
மனோரம்மியமானது

ஸ்டார் புகையிலை கம்பெனி.,

உரிமையாளர்கள்:—
மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்
தபால்பெட்டி நீ. 20.
புதுக்கோட்டை.

ஸ்தாபிதம் 1909 போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

REGISTERED
TRADE MARK

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் மூளைக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம், அரைக்கீரைவிதைத் தைலம்,
கோகுல் கூந்தல் தைலம்
வாசனைப்பாக்கு, பலகாய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

Sole Agents:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris,
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TDR.